பாடம் - 01

## பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்

**1.** இறை வெளிப்பாடு என்பது யாது?
இறைவன் தம் படைப்புக்கள் வழியாக, இயற்கை வழியாக காலத்தின் குறிகள் வழியாக தம் கருத்தை, தம்மைப்பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துவதை இறைவெளிப்பாடு என அழைக்கின்றோம்.

**2.** இறை வெளிப்பாட்டில் எழுதப்பட்ட நூல் எது?
திருவிவிலியம்

**3.** கிறிஸ்தவர்களின் அதி மேன்மையான நூல் எது?
திருவிவிலியம்

**4.** திருவிவியத்தின் வேறு பெயர்கள் எவை?
1. இறைவார்த்தை 2. பைபிள் 3. வேதகாமம் 4. மறைநூல் 5. வேதநூல்

**5.** திருவிவிலியம் ஏன் புனித நூல் உன அழைக்கப்படுகின்றது?
1. இறைவனை ஆசிரியராக கொண்டிருப்பதால்
2. இறைவனின் வார்த்தைகளை கொண்டிருப்பதால்
3. இதன் வழியாக நாம் இறைவனுடன் உறவாடுவதால்
4. இதன் வழியாக இறைவன் தம்மை எமக்கு வெளிப்படுத்துவதால்

**6.** ‘‘திருவிவிலியம் பல நூல்களைக் கொண்ட ஒரு நூலாகும்’’ காரணம் தருக?
1. இஸ்ராயேலரின் வரலாற்றில் வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு இடங்களில் நிகழ்ந்த நிகழ்வுகள் காணப்படுதல்.
2. வெவ்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளமை.
3. வெவ்வேறு இலக்கிய நடையை கொண்டிருப்பதனால்.
4. இதற்குள் கதை, காவியம், இலக்கியம், சட்டம், சங்கீதம், உவமைகள், பழமொழிகள், மறையுரைகள், செபங்கள் என பல வகையான விடயங்கள் காணப்படுவதலாகும்.

**7.** வேதாகாமம் எழுதப்பட்ட காலம் எது?
கி.மு 950 – கி.பி 100 வரையான காலப்பகுதியாகும்

**8.** திருவிவிலியத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
2 பிரிவு
1. பழைய ஏற்பாடு
2. புதிய ஏற்பாடு

**9.** பழைய ஏற்பாடு நூல்களை எத்தனை பகுதிகளாக பிரிக்கலாம்?
**05**
1. சட்ட நூல்
2. வரலாற்று நூல்
3. ஞானநூல்கள்
4. இறைவாக்கினர் நூல்
5. வெளிப்பாட்டு நூல்

**10.** சட்டநூல்கள்(ஐந்நூல்) எவை?
1. தொடக்க நூல்
2. விடுதலைப்பயணம்
3. லேவியர் ஆகமம்
4. எண்ணிக்கை ஆகமம்
5. இணைச்சட்டம்

11. சட்டநூலுக்கு (ஐந்நூலுக்கு) வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?
1. தோரா 2. பஞ்சாகமம் 3. திருச்சட்டம் 4. நீதிச்சட்டம் 5. மோசேயின் சட்டம்

12. சட்டநூலை எபிரேய மொழியில் எவ்வாறு அழைப்பர்?
“தோரா”

13. “தோரா” என்பதன் பொருள் யாது?
திருச்சட்டம் அல்லது படிப்பினை

14. சட்டநூல் (ஐந்நூல்) எவ்வாறு தோற்றம் பெற்றது?
இஸ்ராயேல் மக்கள் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறைநம்பிக்கை, அனுபவங்களின் அடிப்படையிலேயே தோற்றம் பெற்றது.

15. ஐந்நூல் தோற்றம் பெறுவதற்கு உதவிய நூல்கள் எவை?
1. யாவே மரபு 2. ஏலோகிம் மரபு 3. இணைச்சட்டம் மரபு 4. குரு மரபு

16. சட்டநூலில் (ஐந்நூலில) அடங்கும் நூல்கள் எவை?
1. தொடக்கநூல் 2. விடுதலைப்பயணம் 3. லேவியராகமம்
4. எண்ணிக்கையாகமம் 5. இணைச்சட்டம்

17. வரலாற்று நூல்கள் எவை?
1. யோசுவா
2. நீதித்தலைவர்கள்
3. ரூத்து
4. 1 சாமுவேல்
5. 2 சாமுவேல்
6. 1 அரசர்கள்
7. 2 அரசர்கள்
8. 1 குறிப்பேடு
9. 2 குறிப்பேடு
10 எஸ்ரா
11. நெகேமியா
12. தோபித்து
13. யூதித்து
14. எஸ்தர்
15. 1 மக்கபேயர்
16. 2 மக்கபேயர்
17. மலாக்கி.

18. வரலாற்று நூல் என்பது எவ்விடயத்தை எடுத்தியம்பி நிற்கின்றது?
இஸ்ரேயல் மக்களின் வாழ்வில் இடம்பெற்ற அனுபவங்களையும் நிகழ்வுகளையும் நம்பிக்கையின் கண்ணோட்டத்தில் விளங்கி நிற்கின்றது.

19. வரலாற்று நூல்களுள் மக்களால் விரும்பப்பட்ட நூல்கள் எவை?
1. ரூத்
2. எஸ்தர்

20. ஞான நூல்கள் எவை?
1. யோபு
2. திருப்பாடல்கள்
3. நீதி மொழிகள்
4. சபை உரையாளர்
5. இனிமை மிகு பாடல்
6. சாலமோனின் பாடல்
7. சீராக்கின் ஞானம்

21. சாலமோன் அரசன் இறைவனுக்கு பலி செலுத்திய இடம்?
கிபியோன்.

22. சாலமோன் அரசனின் தந்தை பெயர்?
தாவீது

23. சாலமோன் அரசன் இறைவனிடம் கேட்ட வரம் யாது?
ஞானம்

24. ஞானம் என்பது எதைக் குறிக்கின்றது?
நன்மை எது தீமை எது என பகுத்தறிந்து நன்மையை வாழ்வில் கடைபிடித்து கடவுளுக்குரிய நேரிய வாழ்க்கை வாழ்வதைக் குறிக்கின்றது.

25. பழைய ஏற்பாட்டில் ஞானம் என்ற சொல்லுக்கு பயன்படுத்தப்பட்ட எபிரேயச் சொல் எது?
ஹொக்மா

26. "ஹொக்மா"என்பது எதை குறிக்கின்றது?
வெற்றிகரமாகவும் ஆண்டவர் மீது கொள்ளும் அச்சத்தாலும் திருச்சட்டத்தின் படி வாழ்க்கை நடாத்த கிடைக்கும் ஆற்றலை குறிக்கின்றது.

27. ஞானமுள்ள முறையில் வாழுதல் என்பதை நீர் எவ்வாறு விளங்கிக் கொள்ளுவீர்?
நாளாந்த வாழ்வில் நல்லவற்றை மட்டும் தெரிந்து எடுத்து வாமும் வாழ்க்கை ஆகும். இவ்வாறு வாழ துணை செய்பவர் இறைவன் எனவே தினந்தோறும் இறைவேண்டலில் நிலைத்திருத்தாலே இவ் வாழ்க்கை சாத்தியமாகும்.

28. ஞான இலக்கியத்தின் ஆசிரியர் யார்?
அரசன் சாலமோன்

29. இறைவாக்கினரின் நூல்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| 1. எசாயா | 6. ஒசேயா | 11. மீக்கா | 16. செக்கரியா |
| 2. எரேமியா | 7. யோவேல் | 12. நாகூம் | 17. மலாக்கி |
| 3. எசேக்கியல் | 8. ஆமோஸ் | 13. அபகூக்கு | |
| 4. புலம்பல் | 9. ஒபதியா | 14. செப்பனியா | |
| 5. பாரூக்கு | 10. யோனா | 15. ஆகாய் | |

30. இறைவாக்கினர் எனப்படுவோர் யார்?
   1. இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்
   2. இறைவனுக்காகப் பேசுபவர்கள்
   3. இறைவனின் எண்ணங்களை, திட்டங்களை அவரிடம் இருந்து அறிந்து மக்களுக்கு அறிவிப்பவர்கள்.
   4. கடவுள் ஒருவரே என நிலைநாட்டினர்

31. இறைவாக்கினருக்கு வழங்கப்பட்ட பெயர்கள் எவை?
   நபி"

32. "நபி" என்ற எபிரேயச் சொல்லின் பொருள் யாது?
   இறை சித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பர்

33. நபி என்ற சொல்லை கிரேக்க மொழியில் எவ்வாறு அழைப்பர்?
   "ப்றோபேரஸ்"

34. "ப்றோபேரஸ்' என்பதன் பொருள்?
   ஒருவருக்காக பேசுபவர்

35. இறைவாக்கினரை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
   02
   1. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்
   2. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்

36. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர் எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
   02
   1. பெரிய இறைவாக்கினர்
   2. சிறிய இறைவாக்கினர்

37. பெரிய இறைவாக்கினர் யார்?
   1. எசாயா 2. எரேமியா 3. எசேக்கியேல்

38. சிறிய இறைவாக்கினர் யார்?
   1. ஒசேயா 2. யோவேல் 3. ஆமோஸ் 4. ஓபதியா 5. யோனா 6. மீக்கா 7. நாகூம் 8. ஆபக்கூக்கு 9. செப்பனியா 10. ஆகாய் 11. செக்கரியா 12. மலாக்கி

39. பாரூக் யாரால் எழுதப்பட்டது?
   இறைவாக்கினர் எரேமியாவால்

40. இறை வெளிப்பாட்டு இலக்கியம் எது?
   இறைவாக்கிளர் தானியேல்

41. கத்தோலிக்க திருச்சபையின் விசுவாசத்தின் இரு மூலகங்கள் எவை?
   1. திருவிவிலியம்
   2. திருச்சபை பாரம்பரியம்

42. இறைவாக்கினர் நாகூம் நூலை அடுத்து வரும் நூல் எது?
   அபகூக்கு

43. வரலாற்று நூல்களில் பிரதான நபர் யார்?
   இறைவாக்கினர் யோசுவா

44. முதலாவது நூல் தொகுதிற்குரிய சட்ட நூல்?
தொடக்கநூல்

45. இறைவாக்கினர் யோனா நூலுக்குப் பின்வரும் நூல் எது?
மீக்கா

46. ஆமோஸ் இறைவாக்கினர் நூலுக்குப் அடுத்து வரும் நூல் எது?
ஓபதியா

47. வரலாற்று நூல்களில் பெண்கள் தொடர்பான முக்கிய நூல் எது?
எஸ்தர்

48. ஞான நூல்களில் இறுதி நூல் எது?
சீராக்கின் ஞானம்

49. எண்ணிக்கை தொடர்பாக கூறப்படும் நூல் எது?
எண்ணிக்கை ஆகமம்

50. வரலாற்று நூல்களில் இறுதி நூல் எது?
மலாக்கி

51. இறைவாக்கினர் நூல் வரிசையில் 10வது நூல் எது?
யோனா

52. அரசிகள் தொடர்பான முக்கிய நூல் எது?
எஸ்தர், யூதித்து

53. பெரிய இறைவாக்கினரில் ஒருவரின் பெயர்?
இறைவாக்கினர் எசாயா

54. துன்பம் நிறை பாடல்கள் அடங்கிய நூல் எது?
புலம்பல்

55. ஆபகூக்கும் ஆகாய்க்கும் இடையே அமைந்துள்ள நூல் எது?
செப்பனியா

56. இறைவாக்கினர் ஓசேயாவுக்கு அடுத்து வரும் நூல் எது?
யோவேல்

57. இறைவாக்கினர் நூல் வரிசையில் இறுதிக்கு முன் உள்ள நூல் எது?
செக்கரியா

58. அரசர்கள் தொடர்பாக கூறப்படும் இரு நூல்களில் ஒன்று?
1 அரசர்

59. இறைவாக்கினர் வாழ்வில் இருந்து நீர் கற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகள் 5 தருக.
1. இறைவாக்கினர்கள் இறைவனின் சொல்லுக்கு கீழ்படிந்தது போல் நானும் கீழ்படிந்தது நடப்பேன்.
2. இறைவாக்கினர்கள் இறைவனின் செய்தியை மக்களுக்கு எடுத்து சொன்னது போல் நானும் எடுத்து சொல்லுவேன்.
3. இறைவாக்கினர்கள் இறைவனுக்காக துன்பங்களை தாங்கிக் கொண்டது போல் நானும் துன்பங்களை தாங்கிக் கொள்வேன்.
4. இறைவாக்கினர்கள் இறைவனுக்கு ஏற்ற நல்ல வாழ்கை வாழ்ந்தது போல் நானும் நல்ல பிள்ளையாக வாழ்வேன்.

பாடம் - 02

## புதிய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்

1. புதிய ஏற்பாட்டை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
   **03**
   1. நற்செய்தியும் திருத்தூதர் பணிகளும்(வரலாற்று நூல்கள்)
   2. திருமுகங்கள்
   3. வெளிப்பாட்டு இலக்கியம்

2. புதிய ஏற்பாட்டு நற்செய்தியும் திருத்தூதர் பணிகளும்(வரலாற்று நூல்களுள்) அடங்குபவை?
   1. மத்தேயு
   2. மாற்கு
   3. லூக்கா
   4. யோவான்
   5. திருத்தூதர் பணிகள்

3. நற்செய்தி நூல்களுள் காணப்படும் விடயம்?
   இயேசுவின் போதனைகளும் பணிகளும்

4. திருத்தூதர்பணி நூலில் காணப்படும் விடயம்?
   1 இயேசுவின் விண்ணேற்புக்குப்பின் திருச்சபை ஆரம்பித்து வளர்ச்சியடைந்த விதம் எடுத்துக் காட்டப்படுகின்றது
   2 திருத்தூதுர்களான பேதுரு, பவுலின் பணிகள் வெளிக்காட்டப்படுகின்றன.

5. புதிய ஏற்பாட்டிலுள்ள திருமுகங்கள் எவை?
   **21**
6. புதிய ஏற்பாட்டிலுள்ள திருமுகங்களில் பவுலின் திருமுகங்கள் எத்தனை?
   **13**
7. திருமுகங்களை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
   **02.**
   1. பவுலின் திருமுகங்கள்
   2. பொது திருமுகங்கள்

8. பவுலின் திருமுகங்களின் அடங்கும் நூல்கள் எவை?

| | | |
|---|---|---|
| 1. உரோமையர் | 6. 1 திமோத்தேயு | 11. கொலோசேயர் |
| 2. 1 கொரிந்தியர் | 7. 2 திமோத்தேயு | 12. தித்து |
| 3. 2 கொரிந்தியர் | 8. காலாத்தியர் | 13. பிலமோன் |
| 4. 1 தெசலோனிக்கர் | 9. எபேசியர் | |
| 5. 2 தெசலோனிக்கர் | 10. பிலிப்பியர் | |

9. பொது திருமுகங்கள் எவை?

| | |
|---|---|
| 1. எபிரேயர் | 6. 1 யோவான் |
| 2. யாக்கோபு | 7. 2 யோவான் |
| 3. யூதா | 8. 3 யோவான் |
| 4. 1 பேதுரு | |
| 5. 2 பேதுரு | |

10. திருமுகங்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்?
    கத்தோலிக்க மடல்கள், சுற்று மடல்கள், கடிதங்கள்

11.பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கம் யாது?
   1. வேலைப்பளு காரணமாக சபைகளை தரிசிக்க முடியாததால் திருமுகங்கள் மூலம் வழிகாட்டுவதற்காக.
   2. சிறைபட்டிருந்ததால் கிறிஸ்தவ சபைகளை தரிசிக்க முடியாததால் அவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்காக
   3. தவறான கற்பித்தலின் இருந்து கிறிஸ்தவர்களின் பாதுகாப்பிற்காக
   4. கிறிஸ்தவர்களின் நம்பிக்கையில் உறுதிபடுத்த
   5. ஒனேசிமுஸ் என்ற ஊழியருக்காக பரிந்துரைக்க

12. தூய பவுலின் திருமுகங்களை எத்தனை வகைப்படுத்தலாம்?
    **03**
    1. தூய பவுல் தன் கைபட எழுதிய திருமுகம்
    2. தூயபவுலின் அறிவுரைகளைக் கொண்டு வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்கள்.
    3. தூய பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்கள் எழுதிய திருமுகங்கள்.

13. தூய பவுல் தன் கைப்பட எழுதிய திருமுகங்கள் எவை?
    1. உரோமையா்
    2. 1 கொரிந்தியா்
    3. 2 கொரிந்தியா்
    4. கலாத்தியா்
    5. பிலிப்பியா்
    6. 1 தெசலோனிக்கா
    7. பிலமோன்

14. தூய பவுலின் அறிவுரைகளை கொண்டு வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்கள் எத்தனை அவை எவை?
    **02**
    1. எபேசியா்
    2. கொலோசையா்

15. தூய பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்கள் (எழுதமைவைக் கொண்டவை) எத்தனை அவை எவை?
    **04**
    1. 2 தெசலோனிக்கா
    2. 1 திமோத்தேயு
    3. 2 திமோத்தேயு
    4. தீத்து

16. ஏன் திருவெளிப்பாட்டு இலக்கியம் எழுதப்பட்டது?
    கிறிஸ்தவர்கள் அனுபவித்த துன்பங்களின் போது அவர்களை திடப்படுத்த.

17. ஏன் திருவெளிப்பாட்டு இலக்கியத்தில் குறியீடு பயன்படத்தப்பட்டது?
    எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள.

18. புதிய ஏற்பாட்டில் முதலாவது திருமடல் எது?
    உரோமையருக்க எழுதிய திருமுகம்

19. தூய பவுல் தனிப்பட்ட முறையில் எழுதிய இரு திருமுகங்கள் எவை?
    தீத்து, திமொத்தேயு

20. தூய பவுல் திருச்சபைக்கு எழுதிய இரு திருமுகங்கள் எவை?
    உரோமையர், கலாத்தியா்

21. திருமுகங்களில் நான்காவது எது?
    கலாத்தியா்

22. இரண்டாவது நற்செய்தி நூல் எது?
    மாற்கு
23. திருத்தூதர் ஒருவரின் பெயரால் எழுதப்பட்ட 3 திருமுகங்கள் எவை?
    யோவான்

24. புதிய எற்பாட்டின் இறுதி நூல் எது?
    திருவெளிப்பாட்டு நூல்

25. தூய பவுல் ஒரு நபருக்கு எழுதிய இரு திருமுகம் எது?
    பிலமோன்

26. திருத்தூதர்களின் பெயரால் எழுதப்பட்ட திருமுகங்கள் எத்தனை?
    07

27. எபேசியருக்கு அடுத்து வரும் திருமுகம் எது?
    பிலிப்பயர்

28. திருத்துாதுர்களின் செயற்பாடு அடங்கிய நூல் எது?
திருத்தூதர்பணி நூல்

29. திருமுகங்களில் ஏழாவது எது?
கொலோசையர்

30. மூன்றாவது நற்செய்தி நூல் எது?
புனித லூக்கா

31. தூய பவுல் தனி நபர் ஒருவருக்கு தன் கைப்பட எழுதிய திருமுகம் எது?
பிலமோனுக்கு எழுதிய திருமுகம்

32. நான்காவது நற்செய்தியின் ஆசிரியர் யார்?
புனித யோவான்

33. தூய பவுலின் திருமுகங்களில் ஐந்தாவது எது?
எபேசியர்

34. திருத்துாதர்களில் முதன்மையான ஒருவரின் பெயரால் எழுதப்பட்ட 2 திருமுகஙகள் எவை?
பேதுரு

35. திருமுகங்களில் 14 வது எது?
எபிரேயர்

பாடம் - 3

## திருப்பாடல்

1. திருப்பாடல் என்றால் என்ன?
   பக்திப் பாடல்கள், இறை மன்றாட்டுக்கள் ஆகியவற்றின் தொகுப்பாகும்.

2. திருப்பாடல் நூலில் எத்தனை பாடல்கள் உள்ளன?
   150

3. இஸ்ரயேல் மக்களின் செபப்புத்தாகமாகவும், பாமாலையாகவும் இருந்து வந்துள்ள புத்தாகம் எது?
   திருப்பாடல்

4. திருவிவிலியத்தின் செபப்புத்தாகம் என அழைக்கப்படும் நூல் எது?
   திருப்பாடல்

5. திருப்பாடல் நூலின் ஆசிரியர் யார்?
   தாவிது அரசன்

6. இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டுமுறை எத்தனையாக பிரிக்கப்பட்டள்ளது?
   5

7. இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டுமுறையினுள் அடங்கும் திருப்பாடல் அதிகாரங்கள் எவை?
   1. முதலாவது - 1-14
   2. இரண்டாவது –42-72
   3. மூன்றாவது - 73-98
   4. நான்காவது - 90-106
   5. ஐந்தாவது - 107-150

8. திருப்பாடல்களின் எல்லாப் பாடல்களும் எதனோடு நிறைவு பெறுகின்றது?
   இறைபுகழ்ச்சியோடு

9. திருப்பாடலின் வகைகள் எத்தனை?
   7

10. திருப்பாடலின் வகைகள் எவை?
    1. இறைபுகழ்ச்சி
    2. புலம்பல்
    3. நன்றிப்பாடல்
    4. ஞானப்பாடல்
    5. அரசர் பற்றிய பாடல்கள்
    6. வழிபாட்டுப் பாடல்கள்
    7. நம்பிக்கையின் பாடல்கள்

11. இறைபுகழ்ச்சி திருப்பாடலில் அடங்கியுள்ள விடயங்கள் யாவை?
    இறைவனின் படைப்பும் மீட்பின் செயற்பாடுகளும் . இரக்கம். பரிவு, மேன்மை போன்றன வர்ணிக்கப்பட்டுள்ளது.

12. புலம்பல் திருப்பாடலில் அடங்கியுள்ள விடயங்கள் யாவை?
    பிரச்சனைகள், துன்பங்கள் மற்றும் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது ஆறுதல், உதவி, பாதுகாப்பு, மீட்பு வேண்டி இறைவனிடம் மன்றாடுகின்ற பாடலாகும்.

13. புலம்பல் திருப்பாடலை எத்தனை வகையாக பிரிக்கலாம்?
    1. தனிநபர் புலம்பல்
    2. நாட்டு மக்களின் வேண்டுதல்

14. நன்றித் திருப்பாடலில் அடங்கியுள்ள விடயங்கள் யாவை?
    கடவுள் வழங்கிய ஆசிகளுக்கு நன்றி செலுத்துதல்.

15. ஞான திருப்பாடலில் அடங்கியுள்ள விடயம் யாது?
நீதிமான்களாக வாழ மக்களை நல்வழிப்படுத்துவது

16. அரசர் பற்றிய திருப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்கள் எவை?
   1. அரச திருப்பொழிவு
   2. அரச திருமணங்கள்

17. சீயோன் அல்லது வழிபாட்டு திருப்பாடலில் அடங்கியுள்ள விடயங்கள் யாவை?
எருசலேமின் மகத்துவம் வெளிப்படுத்தப்படுகின்றது.

18. சீயோன் அல்லது வழிபாட்டு பற்றிய திருப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்கள் எவை?
எருசலேமை நோக்கிய திருயாத்திரையின் போது

19. நம்பிக்கையின் திருப்பாடலில் அடங்கியுள்ள விடயம் யாது?
இறைவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கை வெளிப்படுத்தப்படுகின்றது.

20. திருப்பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்கள் எவை?
   1. செபம் செய்யும் போது
   2. திருப்பலியில் பதிலுரைப் பாடலாக
   3. திருப்புகழ்மாலை சொல்லும் போது
   4. மாலை ஆராதனையின் போது

21. இயேசு திருப்பாடலை பயன் படுத்திய சந்தர்ப்பங்கள் எவை?
   1. போதனை செய்யும் போது
   2. மலைப்பொழிவின் போது
   3. சிலுவையில்

22. இயேசு சிலுவையில் பாடிய திருப்பாடல் எது?
திருப்பாடல் அதிகாரம் 22

23. ''ஆண்டவர் எனதாயன்'' என்ற பாடலோடு தொடர்புடைய திருப்பாடல் எது?
திருப்பாடல் அதிகாரம் 23

பாடம் - 4

## ஒத்தமை நற்செய்தி

1. ஒத்தமை நற்செய்திகள் எவை?
   1. புனித மத்தேயு
   2. புனித மாற்கு
   3. புனித லூக்கா

2. ஏன் புனித மத்தேயு, மாற்கு, லூக்கா ஒத்தமை நற்செய்திகள் என அழைக்கப்படுகின்றன?
   இந்த நற்செய்திகளிடையே ஒத்த தன்மைகள் காணப்படுவதால்

3. "நற்செய்தி" என்ற சொல்லின் கருப்பொருள் யாது?
   இயேசு கொண்டு வந்த விடுதலை பற்றிய நல்ல செய்தியே நற்செய்தி ஆகும்.

4. நற்செய்தி எவ்வாறு தோற்றம் பெற்றது?
   இயசுவிடமிருந்து அப்போஸ்தலர்களுக்கும் அப்போஸ்தலர் வழியாக நற்செய்தியாளர்களுக்கு கொடுக்கப்பட்டு அவர்கள் பரிசுத்த ஆவியின் ஏவுதலால் தாம் அறிந்தவற்றையும் கேட்டவற்றையும் தொகுத்து தமது கலை கலாசார பண்பாட்டிற்கு ஏற்ப அவற்றை எழுத்தில் வடித்தனர்.

5. நற்செய்தி நூல்கள் எத்தனை? அவை எவை?
   நான்கு, 1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

6. நான்கு நற்செய்திகளுக்குரிய அடையாளங்கள் எவை?
   1. மத்தேயு – மனித முகம்
   2. மாற்கு – சிங்கம்
   3. லூக்கா – எருது
   4. யோவான் - கழுகு

7. மத்தேயு நற்செய்திக்கு மனிதமுகம் ஏன் அடையாளமாக கொடுக்கப்பட்டது?
   இயேசுவின் தலைமுறை (பரம்பரை) அட்டவணையுடன் ஆரம்பிப்பதால் மனிதமுகம் அடையாளமாக கொடுக்கப்பட்டது.

8. மத்தேயு நற்செய்தி எழுதப்பட்ட காலம் எது?
   கி.பி 80 – 90

9. மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் யார்?
   புனித மத்தேயு

10. மத்தேயு பற்றி 5 கருத்துக்கள் தருக?
    1. மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் ஆவார்.
    2. இவர் சுங்கவரி அதிகாரியாக இருந்தார்.
    3. இவரது வேறு பெயர் லேவி.
    4. இவரது மத்தேயு நற்செய்தி அரமேய மொழியில் எழுதப்பட்டது.
    5. இவர் இயேசுவின் சீடராவார்.
    6. இவரது தந்தை பெயர் அல்பேயு

11. புனித மத்தேயு நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் எவை?
    1. இறையரசின் நற்செய்தி
    2. மறைபரப்பு நற்செய்தி
    3. திருச்சபையின் நற்செய்தி

12. புனித மத்தேயு நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது?
    பலஸ்தீனா யூதர்களுக்காக

13. புனித மத்தேயு நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி யாது?
    யூதர்களுக்கும் யூதக்கிறிஸ்தவர்களுக்கும் ஒரு குழப்பமான காலத்திலும் ஜெருசலேம் ஆலயம் உரோமையரால் அழிக்கப்பட்ட சூழ்நிலையிலும் நற்செய்தியை எழுதினார்.

14. புனித மத்தேயு நற்றெய்தி எழுதப்பட்டதன் நோக்கம் யாது?
    இயேசு யூதர்களால் எதிர்பார்க்கப்பட்ட மெசியா என்பதை எண்பிக்கும் நோக்கமாகும்

15.புனித மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் யார்?
புனித மாற்கு

16.புனித மாற்கு நற்செய்திக்குரிய அடையாளம் எது?
சிங்கம்

17.புனித மாற்கு நற்செய்திக்கு ஏன் சிங்கமுகம் அடையாளமாகக் கொடுக்கப்பட்டது?
புனித மாற்கு நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் ஆற்றிய போதனையுடன் ஆரம்பித்தாலும் திருமுழுக்கு யோவானின் போதனை சிங்கம் கர்ச்சிப்பது போன்று இருந்ததாலும் இவ்வடையாளம் மாற்கு நற்செய்திக்குக் கொடுக்கப்பட்டது.

18.புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலம் யாது?
கி.பி 64–66

19.புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட இடம் எது?
உரோமை

20.புனித மாற்கு நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?
பாடுகளின் நற்செய்தி

21.புனித மாற்கு நற்செய்தியை யாருக்காக எழுதினார்?
புறவின கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது

22.புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?
உரோமைய அரசன் நீரோவினால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இச்சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் தமது விசுவாசத்தில் உறுதியாக இருப்பதற்காக அவர்களைத் தைரியப்படுத்தும் பொருட்டே இந்நற்செய்தி எழுதப்பட்டது.

23.புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்திகளிலும் எது முதல் எழுதப்பட்ட நற்செய்தியாகவுள்ளது?
மாற்கு நற்செய்தி

24.மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி?
கிறிஸ்தவம் ஆரம்பித்து அது பலஸ்தீன, யூத செமித்திய பண்பாடுகளில் இருந்து விலகி, உரோமைப் பேரரசின் புறவினப் பண்பாட்டுக்கு மாற்றமடைந்த பின்னணியில் தான் நற்செய்தி எழுதப்பட்டது.

25. புனித மாற்கு பற்றி 5 வசனம் தருக?
1. இவர் யூதர்கள் மத்தியில் யோவான் என்றும் புறவினத்தவர்கள் மத்தியில் மாற்கு என்றும் அழைக்கப்படுகின்றார்.
2. இவர் மாற்கு நற்செய்தியின் ஆசிரியராவார்.
3. இவர் ஜெருசலேமில் வாழ்ந்த மரியா என்ற பெண்ணின் மகனாவார்.
4. இவரை முதன் முதலில் கெத்சமெனித் தோட்டத்தில் காண்கின்றோம்.
5. இவர் பேதுருவின் மொழி பெயர்ப்பாளராக இருந்தார்.

26.புனித லூக்கா நற்செய்தியின் ஆசிரியர் யார்?
புனித லூக்கா

27.புனித லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட ஆண்டு?
கி.பி 80-85

28.புனித லூக்காஸ் நற்செய்தியின் அடையாளம் எது?
எருது

29.புனித லூக்கா நற்செய்திக்கு ஏன் எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது?
ஆரம்ப காலங்களில் பலிக்கு எருது பயன்படுத்தப்பட்டது. புனித லூக்கா நற்செய்தியும் குரு செக்கரியாசின் பலியோடு ஆரம்பிப்பதால், புனித லூக்கா நற்செய்திக்கு எருது அடையாளமாக கொடுக்கப்பட்டது.

30.புனித லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட இடம் எது?
சிரியா அந்தியோக்கியாவில்

31. புனித லூக்கா நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?
1. ஏழைகளின் நீதி 2. புற இனத்தவர் நீதி 3. அன்பின் நீதி 4. செபத்தின் நற்செய்தி
5. பெண்களின் நற்செய்தி 6. இரக்கத்தின் நற்செய்தி 7. மீட்பின் நற்செய்தி
8. சமூக நற்செய்தி 9. தாழ்ச்சியுடையோரது நற்செய்தி 10. மூன்றாம் நற்செய்தி

32.புனித லூக்கா நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?
இயேசுக் கிறிஸ்து யூதர்களுக்கு மட்டுமல்ல உலக மக்கள் அனைவருக்கும் மீட்பர் என்பதை எடுத்துக்காட்டவே நற்செய்தியை எழுதினார்.

33.புனித லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி யாது?
புற இனக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக உள்ளிருந்தும் வெளியில் இருந்தும் எதிர்ப்புக்கள் வந்த சூழ்நிலையில் நற்செய்தியை எழுதினார்.

34.புனித லூக்கா நற்செய்தி யாருக்காக எழுதப்பட்டது?
யூதர்களுக்காகவும், புற இனத்தவர்களுக்காகவும்

35.புனித லூக்கா பற்றி 5 விடயங்கள் தருக?
1. இவர் புனித லூக்கா நற்செய்தியின் ஆசிரியர்.
2. இவர் ஓர் வைத்தியர்.
3. புனித பவுலின் பயணத் தோழன்.
4. இவர் ஒரு புறவினத்தவர்.
5. இவரது பெற்றோர் கிரேக்கர்.

பாடம் -5

## யோவான் நற்செய்தி

1. புனித யோவான் நற்செய்தியின் ஆசிரியர் யார்?
   புனித யோவான்

2. புனித யோவானின் வேறு பெயர்?
   அருளப்பர் அல்லது அன்புச்சீடர்

3. புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட ஆண்டு?
   கி..பி 90-100

4. புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட இடம்?
   எபேசு

5. புனித யோவான் நற்செய்திக்கு வழங்கப்பட்ட அடையாளம் எது?
   கழுகு

6. புனித யோவான் நற்செய்திக்கு ஏன் கழுகு அடையாளம் கொடுக்கப்பட்டது?
   கழுகு உயரப் பறக்கும் பறவை, அது மட்டுமல்ல கூரிய பார்வை கொண்டது, யோவான் நற்செய்தியும் இயேசுவின் வாழ்வு போதனையை கூறுவதைத் தவிர்த்து, அவரது வாழ்வு போதனைகளுள் காணப்படும் ஆழமான இறையியல் கருத்துக்களை காண்பதால் கழுகு அடையாளம் கொடுக்கப்பட்டது.

7. புனித யோவான் நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்?
   ஆன்மீக நற்செய்தி

8. புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட நேதக்கம் யாது?
   இயேசுவே இறைமகனாகிய மெசியா என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவே நற்செய்தியை எழுதினார்.

9. புனித யோவான் நற்செய்தி எழுதப்பட்ட பின்னணி?
   யூத திருச்சபை, புற இனத் திருச்சபையாக மாற்றம் அடைந்த பின்னணியில்

10. புனித யோவான் இயேசுவின் இறைத்தன்மையை எவ்வாறு வெளிப்படுத்தினார்?
    ‘‘நானே’’ என்ற கூற்றுக்கள் மூலமாக

11. புனித யோவானின் ‘‘நானே’’ என்ற கூற்றுக்கள் எத்தனை? அவை எவை?
    7
    1. நானே வாழ்வ தரும் உணவு
    2. நானே உலகின் ஒளி
    3. ஆடுகளுக்கு வாயில் நானே
    4. நானே நல்ல ஆயன்
    5. உயிர்தெழுதலும் வாழ்வும் நானே
    6. வழியும் உண்மையும் வாழ்வும் நானே
    7. நானே திராட்சைக் செடி

12. புனித யோவானின் ‘‘நானே’’ என்ற கூற்றுக்களை வளக்குக?

### 1. நானே வாழ்வ தரும் உணவு

நிலைவாழ்வை பெற்றுத்தரும் உண்மையான உணவு இயேசுக் கிறிஸ்துவே. அவர் நற்கருணையில் உயிருடன் வீற்றிருக்கின்றார். எனவே நாம் நற்கருணையை பக்தி மரியாதையுடன் பெற்றக்கொள்ள வேண்டும். அடிக்கடி நற்கருணையை பெற்றக்கொள்வதால் எமது ஆன்மா ஊட்டம் பெறுகிறது.

## 2. நானே உலகின் ஒளி

இயேசுக் கிறிஸ்து அனைவருக்கும் ஒளியாக இருக்கின்றார். ஒளி இருக்கும் இடத்தில் இருளுக்கு இடமில்லை. ஒளியில் வாழ்வோர் பாவச் செயலில் இருந்து வலகி இருப்பார்கள். நாமும் ஒளியின் பிள்ளைகளாக வாழ்வோம்.

## 3. ஆடுகளுக்கு வாயில் நானே

இயேசுக் கிறிஸ்து என்னும் ஆயனின் பிள்ளைகளாகிய நாம் அவர் வழியாகவே நாம் நிலை வாழ்வை பெற்றுக் கொள்ள முடியும்.

## 4. நானே நல்ல ஆயன்

நல்ல ஆயன் மந்தைகளுக்கு முன்பாகச் சென்று, வழிகாட்டுவதோடு பாதுகாப்பாகவும் இருப்பார். அது போலவே இயேசுக் கிறிஸ்துவும் எமது நல்ல ஆயன். எனவே நாம் அவர் காட்டும் வழியில் நடப்போம்.

## 5. உயிர்தெழுதலும் வாழ்வும் நானே

இயேசுக் கிறிஸ்து மரணத்தை வென்று எமக்கு வாழ்வு கொடுத்தார். அவர் மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்தது போல நாமும் உயிர்த்தெழுந்து முடிவில்லா வாழ்வைப் பெற்றுக் கொள்ள நல்வாழ்வு வாழ்வோம்.

## 6. வழியும் உண்மையும் வாழ்வும் நானே

இறைவனிடம் செல்லும் வழியை இயேசு கிறிஸ்துவே அறிவார். அவர் மீது நம்பிக்கை கொள்வதன் வழியாகவே முடிவில்லா வாழ்வை பெற்றுக் கொள்ள முடியும். எனவே நாம் உண்மைக்குச் சான்று பகர்ந்து வாழ்வோம்.

## 7. நானே திராட்சைச் செடி

திராட்சை செடியில் அதன் கிளைகள் இணைந்திருந்தால் தான் அதனால் பலன் கொடுக்க முடியும். அதே போல் தான் நாம் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் தான் பலன் கொடுக்க முடியும்.

13. "நானே நல்ல ஆயன்" என்ற இயேசுவின் கூற்றை உமது அனுபவத்தோடு இணைத்து 5 வசனம் எழுதக?

1. நான் இரவு நித்திரைக்கு முன் இயேசுவிடம் மன்றாடுவேன் அவரும் என்னை இரவு முழுவதும் காப்பாற்றி வந்துள்ளார்.
2. நான் வீதியால் பயணம் செய்யும் போது எனக்கு ஆபத்து வராமல் பாதுகாத்துள்ளார்
3. நான் பசியால் வாடிய போது வேறு நபர்கள் வழியாக உணவு அளித்துள்ளார்.
4. நான் நோயால் வருந்திய போது எனக்கு ஆறுதல் தந்தார்.
5. நான் தீய வழியில் செல்ல முனைந்த போது நான் சரியான வழியில் செல்ல வழி காட்டினார்.

14. புனித யோவான் பற்றி அறிந்துள்ளதை தருக?

1. புனித யோவான் நற்செய்தியின் ஆசிரியர்.
2. இவர் இயேசுவால் விசேடமாக அன்பு செய்யப்பட்ட சீடர்களுள் ஒருவர்.
3. இறக்க மாட்டார் என்ற வாதந்திக்கு இலக்கணமானவர்.
4. இறுதி இராவுணவின் போது இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தவர்.
5. சிலுவை அடியில் தாய் மரியாளிடம் ஒப்படைக்கப்பட்டவர்.
6. இவர் செபதேயு, சலோமையின் புதல்வர்.
7. இவரது சகோதரன் யாக்கோபு.

15. நற்செய்தி நூல்கள் எவை?

1. புனித மத்தேயு
2. புனித மாற்கு
3. புனித லூக்காஸ்
4. புனித யோவான்

16. நற்செய்தி நூலை படிப்பதனால் நீர் பெறும் நன்மைகள் எவை?

1. நற்செய்தி நூல்கள் எவை என அறியக் கூடியதாகவுள்ளது.
2. நற்செய்தி நூல்களை யார் எழுதினார்கள் என அறியக் கூடியதாகவுள்ளது.
3. இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை அறியக் கூடியதாகவுள்ளது.
4. இயேசுவைப் போல் பணி செய்ய வேண்டும் என்ற உணர்வைப் பெறக் கூடியதாகவுள்ளது.
5. நற்செய்தி நூல்களின் அமைப்பு, பின்னணி, அடையாளம், நோக்கம் என்பவற்றை அறியக் கூடியதாகவுள்ளது.

பாடம் - 6

## மனிதன் பாவத்தில் விழுதல்

**1.** பாவம் என்றால் என்ன?
இறைவனின் சொல்லை, விருப்பத்தை மீறுவது பாவமாகும்.

**2.** பாவத்திற்கு காரணம் யாது?
ஆசை

**3.** ஆதிப் பெற்றோர் யார்?
ஆதாம், ஏவாள்

**4.** ஆதாம், ஏவாளுக்கு இறைவன் கொடுத்த கட்டளை என்ன?
தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை உண்ணலாம், ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை உண்ணக்கூடாது. அதை தொடவும் கூடாது மீறினால் நீங்கள் சாவீர்கள் என்று சொன்னார்.

**5.** விவிலியத்தில் பாம்பு எவ்வாறு உருவகிக்கப்படுகின்றது?
சாத்தானாக

**6.** பாம்பு ஆதாம் ஏவாளுக்கு கூறியது யாது?
நீங்கள் சாகமாட்டீர்கள் ஏனெனில் அதை உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் நீங்கள் கடவுளைப் போல நன்மை தீமை அறிவீர்கள்

**7.** ஏவாள் நன்மை, தீமை அறியும் மரத்தின் கனியை உண்டதற்கு கூறிய காரணம் யாது?
1. அந்த மரத்தின் கனி உண்பதற்கு சுவையானது.
2. கண்களுக்கு களிப்பூட்டுவது
3. அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது.

**8.** ஆசைக்கு அடிமைப்பட்டு எடுக்கும் முடிவு எவ்வாறானது?
தவறானது

**9.** நாம் தீர்மானம் எடுக்கும் போது எதற்கு செவிசாய்க்கின்றோம்?
எமது மனச்சான்றுக்கு

**10.** வாழ்வளிக்கும் மரம் எதைக் குறிக்கின்றது?
சாகா வரத்தை

**11.** இன்பவனம் எதைக் குறிக்கின்றது?
அமைதியான, மகிழ்ச்சியான எக்குறையுமில்லாத, நிறைவான வாழ்வைக் குறிக்கின்றது.

**12.** இறைவன் ஆதாமிடம் வினாவியது என்ன?
“நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? உண்ணக் கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?

**13.** இறைவனின் கேள்விக்கு ஆதாம் அளித்த பதில் யாது?
என்னுடன் இருக்கும் படி நீர் தந்த அந்தப் பெண் மரத்தின் கனியை எடுத்துக் கொடுத்தாள் நானும் உண்டேன் என்றார்.

**14.** இறைவன் பெண்ணிடம் நீ ஏன் இவ்வாறு செய்தாய் என்று கேட்க பெண் அளித்த பதில் என்ன?
பாம்பு என்னை ஏமாற்றியது நானும் உண்டேன்.

**15.** ஆதாம் ஏவாள் ஆடையின்றி இருப்பதாக கூறினார். இங்கு “ஆடையின்றி” என்ற சொல் குறிப்பது?
பாவ நிலையை உணருவதை

**16.** பாவத்தில் விழுந்த மனிதனுக்கு கடவுள் கொடுத்த தண்டனை யாது?
**ஏவாளுக்கு**
1. உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்.
2. வேதனையில் நீ குழந்தையைப் பெறுவாய்.
3. உன் கணவனின் மேல் வேட்கை கொள்வாய் அவனோ உன்னை ஆள்வான்.

**17.** **ஆதாமுக்கு**
1. உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது.
2. உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து உண்பாய்.
3. மண் முட்செடியையும் முட்புதரையும் உனக்கு முளைப்பிக்கும்.
4. வயல் வெளிப் பயிர்களை நீ உண்பாய்.
5. நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் மண்ணுக்கே திரும்புவாய்.

**18.** பெண்ணைப் பாவம் செய்ய தூண்டிய பாம்புக்கு இறைவன் கொடுத்த தண்டனை யாது?
**பாம்புக்கு**
1. கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய்.
2. வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியை உண்பாய்.
3. உனக்கும் பெண்ணுக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீயோ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவாய்.

**19.** இறைவன் ஆதாம் ஏவாளுக்கு ஏன் தண்டனை கொடுத்தார்?
அவர்கள் மேல் கொண்ட அன்பினால்

**20.** "உனக்கும் பெண்ணுக்கும் பகையை உண்டாக்குவேன் அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீயோ அதன் குதிக்காலை காயப்படுத்துவாய்" என்பதன் ஊடாக இறைவன் கூற விளைவது?
மெசியாவினால் நிறைவேற்றப்படவுள்ள மீட்பை

**21.** ஆதாம் ஏவாள் கதை மூலம் இறைவன் உணர்த்த விரும்புவது?
1. பாவம்
2. தண்டனை
3. மனிதர் இறைவனுக்கு உரியவர்

**22.** ஆதாம் ஏவாளுக்கு இறைவனின் இரக்கமும் உண்டு என்பதை உணர்ந்தார்கள்?
1. அவர்களுக்கு தோல் ஆடை செய்து கொடுத்ததன் மூலம்.
2. மெசியாவை அனுப்புவதாக வாக்களித்ததிலிருந்து.

**23.** பாம்பு பெண்ணிடம் வினாவியது என்ன?
கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக் கூடாது என்றது உண்மையா?

**24.** ஏவாள் கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனமைக்கு காரணம் யாது?
கடவுளைப் போல் ஆக ஆசைப்பட்டதால்

**25.** நாம் நேரிய வழியில் வாழ எமக்கு வழிகாட்டுபவர்கள் யார்?
1. எமது மனச்சான்று
2. பெற்றோர்
3. பெரியோர்
4. ஆசிரியர்கள்
5. சமயத்தலைவர்கள்

பாடம் - 7

## காயினும் ஆபேலும்

1. ஆதிப் பெற்றோரின் பிள்ளைகள் யார்?
காயின் ஆபேல்
2. காயினின் தொழில் யாது?
வேளாண்மை செய்தல்
3 ஆபேலின் தொழில் யாது?
மந்தை மேய்த்தல்

4 இறைவன் யாருடைய காணிக்கையை ஏற்றுக் கொண்டார்?
ஆபேலின்

5 ஏன் காயின் காணிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை?
காயின் நினைத்து கொண்டது போல் விளைச்சலில் நல்லதை இறைவனுக்கு காணிக்கையாகக் கொடுக்கவில்லை.

6 இறைவன் காயினின் காணிக்கையை ஏற்றுக் கொள்ளாததால் காயின் என்ன செய்தார்?
ஆபேல் மீது எரிச்சல் கொண்டு ஆபேலைக் கொலை செய்தான்

7 ஆண்டவர் காயினிடம் என்ன கேட்டார்?
உன் சகோதரன் ஆபேல் எங்கே?

8 ஆண்டவர் வினாவியதற்கு காயின் அளித்த பதல் யாது?
எனக்கு தெரியாது நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளியோ?

9 காயின் ஆபேலை கொலை செய்ததால் இறைவன் காயினுக்கு கொடுத்த தண்டனை யாது?
1. நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.
2. நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்கு பலன்தராது.
3. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய் என்றார்.
4. பூமியில் இருந்து துரத்தப்பட்டிருக்கிறாய்

10 காயினைக் கொல்பவன் எத்தனை மடங்கு பழி சுமப்பான்?
ஏழு முறை
11 ஆதிப் பெற்றோருக்கு இறைவன் ஆபேலுக்குப் பதிலாக கொடுத்த பிள்ளை யார்?
சேத்
12 காயினுக்கு பிறந்த பிள்ளையின் பெயர் யாது?
ஏனோக்
13 சேத்தின் பிள்ளையின் பெயர் யாது?
ஏனோசு
14 காயின் ஆபேல் கதை எந்த மரபில் எழுதப்பட்டது?
யாவே மரபில்

15 காயின் ஆபேல் கதை மூலம் இறைவன் எமக்கு கற்பிப்பது யாது?
1. பாவம் செய்தால் தண்டனை உண்டு.
2. பாவத்தின் விளைவாகவே கோபம், வஞ்சகம்,பொறாமை, கொலை என்பன சமூகத்தில் தோன்றின.
3. மற்றவரின் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்ள வேண்டும்
4. இறைவன் இரக்கம் உள்ளவர்.
5. நாம் சகோதர அன்பில் நிலைத்திருக்க வேண்டும்.

16 நாம் தவறு செய்யும் போது எங்களுக்கு வழி காட்டுபவர்கள் யாவர்?
பெற்றோர், பெரியோர்கள், சமயத்தலைவர்கள், ஆசிரியர்கள்

17 எரிச்சலை வெற்றி கொள்ள நீர் செய்யக் கூடிய செயற்பாடுகள் 3 தருக?
தியானத்தில் ஈடுபடல், யோகா செய்தல், செபத்தில் இருத்தல்

பாடம் - 8

## பெருவெள்ளமும் நோவாவுடன் உடன்படிக்கையும்

1. நோவானின் தந்தையின் பெயர் யாது?
இலாமேக்

2. “நோவா” என்பதன் பொருள் யாது?
“ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடின வேலையிலும் உழைப்பிலும் நமக்கு ஆறுதல் அளிப்பான்”

3. நோவாவின் பிள்ளைகள் பெயர்?
1. சேம் 2. காம் 3. எப்பேத்து

4. நோவாவின் குணப் பண்புகள் எவை?
1. நீதிமான்
2. குற்றமற்றவர்
3. இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்

5. நோவாவின் கால மக்களின் குற்ற செயல்களை கண்டு இறைவன் கூறியது யாது?
நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். மனிதர் முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள் வரை அனைத்தையும் அழிப்பேன். ஏனெனில் இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன். வானுலகின் கீழுள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்காக மண்ணுலகின் மேல் வெள்ளப் பெருக்கு வரச் செய்வேன். மண்ணுலகில் உள்ளவை எல்லாம் மடிந்து போகும்.

6. நோவா பேழை செய்யப் பயன்படுத்திய மரம் எது?
கோபர் மரம்

7. இறைவன் நோவா அமைத்த பேழையினுள் எத்தனை சோடி பிராணிகளை வைக்கச் சொன்னார்?
இரண்டு சோடி

8. வெள்ளப் பெருக்கு கதை எழுதப்பட்ட மரபுகள் எவை?
யாவே, குரு

9. வெள்ளம் எத்தனை நாட்களாக நின்றது?
150 நாட்களாக

10. நோவா வெள்ளம் வற்றிவிட்டதை அறிய முதலில் எதை அனுப்பினார்?
காகத்தை

11. நோவா வெள்ளம் வற்றிவிட்டதை அறிய இறுதியாக எதை அனுப்பினார்?
புறாவை

12. வெள்ளம்வற்றிவிட்டது என்பதை காட்ட புறா கொண்டு வந்தது என்ன?
ஒலிவ இலையை

13. இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை யாது?
சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படமாட்டாது, மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வராது.

14. இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக கொடுக்கப்பட்டது என்ன?
வானவில்

15. நோவாவின் நேர்மையான செயலால் அவரும் அவரது குடும்பமும் காப்பாற்றப்பட்டது போல் நீர் செய்யும் நல்ல செயலால் யாது விளையும்?
1. எனக்கு தனிப்பட்ட முறையில் நன்மையை நற்பெயரைத் தரும்.
2. எனது குடும்பத்திற்கு நன்மையை நல்ல பெயரைத் தரும்.
3. எனது சமூகத்திற்கு நன்மையை நல்ல பெயரைத் தரும்.
4. எனது நாட்டிற்கு நன்மையை நல்ல பெயரைத் தரும்.
5. இறைவனின் ஆசீரைப் பெற்றுத் தரும்.

16. நோவாவைப் போன்று நீதிமானாக வாழ, உமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் 5 தருக?
   1. நேர்மை உள்ளவராக வாழுதல்.
   2. இறைவனோடு நல்லுறவை வளர்த்துக் கொள்ளல்.
   3. கடமைகளை பொறுப்புடன் செய்தல்.
   4. தேவையுடையோருக்கு உதவுதல்.
   5. பெரியோர் சொற்படி நடத்தல்.
   6. குற்றமற்றவராக இருத்தல்.

17. வெள்ளப் பெருக்கின் நோக்கம் யாது?
   பாவத்தை இவ்வுலகில் இருந்து அகற்றுதல்.

18. வெள்ளப் பெருக்கு நிகழ்வின் மூலம் விவிலிய ஆசிரியர் எதை உணர்த்த விளைகின்றார்?
   புதிய தொரு யுகம் ஆரம்பிக்கப்பட்டதை உணர்த்துகிறார்.

19. வெள்ளப் பெருக்குக்குக் காரணம் யாது?
   மனிதனின் பாவம்

20. வெள்ளப் பெருக்கு நிகழ்வு வழியாக வெளிப்படுத்தப்படும் உண்மை யாது?
   மனித குலத்தில் பெருகிய தீமையை இல்லாது ஒழிப்பது

21. தற்கால சமூகத்தின் பாவச் செயல்கள் எவை?
   1. மனித கொலை 2. களவு 3. இலஞ்சம் 4. எரிச்சல் 5. பழிவாங்கல்
   6. யுத்தம் 7. போதைப் பொருள் பாவனை 8. சிறுவர் துஷ்பிரயோகம்
   9. தவறான உறவு 10. மாய மந்திரங்களில் ஈடுபடுதல்

22. இன்றைய சமூகத்தில் பாவச் செயல்களை ஒழிப்பதற்கு பாடசாலை மாணவராகிய நீர் செய்யக் கூடிய செயல்கள் 5 தருக.
   1. களவு எடுப்போரை தெரிந்தால் பெரியவர்களுக்கு தெரியப்படுத்துவேன்.
   2. சிறுவர் துஷ்பிரயோக செற்பாடுகளில் ஈடுபடுவோரை கண்டால் பெரியவர்களுக்கு தெரியப்படுத்துவேன்.
   3. போதைப் பாவனையில் ஈடுபடுவோரை கண்டால் பெரியவர்களுக்கு தெரியப்படுத்துவேன்.
   4. சமூகத்தில் உள்ள எனது வயதை ஒத்த மாணவர்களுக்கிடையில் சண்டை ஏற்பட்டால் அவர்களை சமதானப்படுத்துவேன்.
   5. சமூகத்தில் உள்ள எனது வயதை ஒத்த மாணவர்களுக்கிடையில் பழிவாங்கும் எண்ணம் காணப்பட்டால் அவர்களை சமதானப்படுத்துவேன்.

23. “அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும் நீயோ அதன் குதிக்காலை காயப்படுத்துவாய் என்பதில் “வித்து” யாரைக் குறிக்கின்றது?
   மீட்பராம் இயேசு கிறிஸ்துவை

24. திருப்பாடல்களில் இறுதியாக உள்ள வரிகள் எதைக் கொண்டு அமைந்ததுள்ளது?
   செப வடிவத்தை

25. நற்செய்தி நூலை நீர் படிப்பதனால் பெறும் நன்மைகள் 5 தருக.
   1. இறைவனை நல்லவர் என அறியக் கூடியதாகவுள்ளது.
   2. இறைவன் இரக்கம் உள்ளவர் என அறியக் கூடியதாகவுள்ளது.
   3. இறைவன் செய்த நன்மைகளை என அறியக் கூடியதாகவுள்ளது.
   4. இறைவனுக்கு எதிராக நடந்தால் தண்டிக்கப்படுவோம் என உணரக் கூடியதாகவுள்ளது.
   5. இறைவனைப் போல் நானும் பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்துக்கொள்வேன்.

26. ஆதாம் ஏவாள் இறை கட்டளையை மீறி பாவம் செய்ததன் மூலம் நீர் பெறும் படிப்பினைகள் யாது?
   1. இறை கட்டளையை மீறக் கூடாது.
   2. இறை கட்டளையை மீறினால் தண்டணை கிடைக்கும்.
   3. அத் தண்டணை எங்கள் சந்ததியைப் பாதிக்கும்.
   4. சாத்தான் எங்களை ஏமாற்ற பல வடிவங்களில் வரும்.
   5. நாம் ஏமாறாமல் கவனமாக இருக்க வேண்டும்.

பாடம் - 9

## நீதித் தலைவர்கள்

1. நீதித் தலைவர்கள் எனப்படுவோர் யார்?
இறைவன் காலத்துக்கு காலம் அன்னியர்களிடம் இருந்து தம் மக்களை விடுவிக்க தேர்ந்தெடுத்த தலைவர்களே நீதித் தலைவர்கள் ஆவார்கள்.

2. நீதித் தலைவர்களை எற்படுத்தியது பற்றி திருமறை நூலில் கூறப்பட்டுள்ளது யாது?
ஆண்டவர் நீதித் தலைவர்களை எழச் செய்தார். அவர்கள், மக்களை கொள்ளையடித்தவர்களின் கைகளிலிருந்து விடுவித்தனர்.

3. நீதித் தலைவர்களின் காலமாக அமைவது?
கி.மு. 1200 – கி.மு. 1050

4. நீதித் தலைவர்களின் பணி யாது?
1. போரின் போது தலைமைத்துவம் வகித்தது.
2. யூத மக்களை ஓரினமாக்குவதற்கு அடித்தளம் அமைத்தது.
3. மக்களுக்கு நீதி வழங்கியது.
4. மக்களை நல்ல வழியில் நடத்தி சென்றது.
5. மக்கள் பிழையான வழியில் நடக்கும் போது எச்சரித்தது.

5. திருவிவிலியத்தில் உள்ள நீதித் தலைவர்கள் எத்தனை?
**12**

| | | |
|---|---|---|
| 1. ஒத்னியேல் | 5. கிதியோன் | 9. இப்சான் |
| 2. ஏகூது | 6. தோலா | 10. ஏலோன் |
| 3. சம்கார் | 7. ஜாயீர் | 11. அப்தோன் |
| 4. தெபோரா | 8. ஜெப்தா | 12. சிம்சோன் |

6. சிறுகுறிப்பு எழுதுக

**1. நீதித்தலைவர் தெபோரா**

தெபோரா ஞானமுள்ள பெண். அவரது காலத்தில் கானானிய அரசர்கள் இஸ்ரயேலரைத் துன்புறுத்தினர். இதனால் மக்கள் இறைவனை மன்றாட இறைவன் தெபோரா வழியாக பாராக் என்ற படைத்தளபதியை ஊக்கப்படுத்தி இறைவனின் கட்டளைப்படி விரர்களுடன் போருக்கு அனுப்பினார். இறைவன் மழை பெய்யச் செய்து கானானிய படைகளை பலம் இழக்கச் செய்தார். இதனால் இஸ்ரயேல் இலகுவாக வெற்றி பெற்றனர். அப்போது தெபோரா “ இது இஸ்ரயேல் படையின் வெற்றி அல்ல, இது இறைவன் பெற்று தந்த வெற்றி”. என்றார்.

**2. நீதித்தலைவர் கிதியோன்**

நாற்பது (40) வருட கால சமாதானத்திற்கு பின்பு, மீண்டும் இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்கு எதிராக பாவம் செய்தபடியால் இறைவன் அவர்களை தண்டிக்க மிதியானியரின் கையில் ஒப்படைத்தார். அவர்கள் இஸ்ரயேல் மக்களை துன்புறுத்தினர். மீண்டும் இஸ்ரயேல் மக்கள் இறைவனை மன்றாட இறைவன் நீதித்தலைவர் கிதியோனை அனுப்பினார். அவர் இறைவனின் கட்டளைப்படி 300 விரர்களுடன் போருக்கு சென்றார். யுத்த வீரர்கள் கிதியோனின் அறிவுரைப்படி மிதியானியரின் பாளையத்திற்கு சென்று பானைகளை உடைத்து எக்காளங்களை ஊதினர். இதனால் குழப்பமடைந்த மிதியானியரின் படைவீரர்கள் தங்களுக்குள்ளே ஒருவர் ஒருவரை வாளால் குத்திக் கொன்றனர்.

**3. நீதித்தலைவர் சாமுவேல்**

சாமுவேல் எப்ராயிம் கோத்திரத்தை சேர்ந்தவர். அவரது தந்தை பெயர் எல்கான, தாய் பெயர் அன்னா. சாமுவேல் வாழ்நாள் முழுவதும் இஸ்ரயேல் மக்களுக்கு தலைவராய் இருந்தார். பெத்தேல், கில்கால், மிஸ்பா ஆகிய இடங்களுக்கு சென்று மக்களுக்கு நீதி வழங்கினார். பின்பு அவர் தம்முடைய இடமாகிய இராமாவில் நீதி வழங்கினார். இவர் இஸ்ரயேல் மக்களின் கடைசி நீதித்தலைவர். முதலாவது இறைவாக்கினர். இவர் ஓர் குரு. இவர் தான் சவுலையும், தாவீதையும் அரசர்களாக திருப் பொழிவு செய்தார்.

7. நீதித்தலைவர் சாமுவேலின் தந்தை தாய் பெயர் யாது?
தந்தை - எல்கான, தாய் - அன்னா

8. நீதித்தலைவர் சாமுவேல் எந்த கோத்திரத்தை சேர்ந்தவர்?
எப்ராயிம் கோத்திரத்தை

9. இஸ்ரயேல் மக்களின் கடைசி நீதித்தலைவரும் முதலாவது இறைவாக்கினரும் யார்?
சாமுவேல்

10. சவுலையும், தாவீதையும் அரசர்களாக திருப் பொழிவு செய்தவர் யார்?
சாமுவேல்

11. நீதித்தலைவர்களிடம் இருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் எவை?
1. இறைவன் என்றும் எம்மோடு இருக்கின்றார் என நம்புதல்.
2. சவால்களின் போது இறைவனிடம் வேண்டுதல்.
3. மற்றவர்களுடைய நன்மைக்காக செயற்படுதல்.
4. மற்றவர்களுடைய பிரச்சனைகளில் உதவுதல்.
5. மற்றவர்கள் பிழை செய்யும் போது அதை உணர்த்துதல்.
6. எனக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு நீதி வழங்குதல்.

12. நீர் பிறரின் நன்மைக்காக செயற்பட்ட சந்தர்ப்பங்கள் 5 தருக.
1. எனது நண்பி ஏழை, அவர் பசியால் கஸ்ரப்பட்டார். நான் அவருக்கு எனது சாப்பாட்டை கொடுத்தேன்.
2. எனது அயல் வீட்டில் சிறுமி இருக்கிறார். அவருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பேன்.
3. எனது அயல் வீட்டில் பாட்டி ஒருவர் உள்ளார். அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வேன்.
4. பாடசாலையில் ஒரு நாள், மாணவி ஒருவர் செய்யாத பிழைக்கு தண்டணை அனுபவித்தார். நான் ஆசிரியரிடம் உண்மையை கூறினேன்.
5. எனது உறவினர் ஒருவர் எனது வகுப்பு மாணவி அவர் தந்தையை இழந்தவர். எனக்கு வரவேண்டிய உதவியை அவருக்கு விட்டுக் கொடுத்தேன்.

13. **இறைவார்த்தைகளை மனனம் செய்க.**
1. ‘‘ஆண்டவர் நீதித் தலைவர்களை எழச் செய்தார். அவர்கள், மக்களை கொள்ளையடித்தவர்களின் கைகளிலிருந்து விடுவித்தனர்’’.
2. ‘‘வலிமை மிக்க மகனே! ஆண்டவர் உன்னோடு இருக்கின்றார்’’.
3. ‘‘ உன்னுடைய இதே ஆற்றலுடன் செல்வாய், மிதியானியர் கையிலிருந்து இஸ்ரயேலை நீ விடுவிப்பாய். உன்னை அனுப்புவது நானல்லவா? ’’

**பாடம் - 10**

## அரசர்கள்

1. ஏன் இஸ்ரயேல் மக்கள் தமக்கு அரசர் வேண்டும் என்று கேட்டார்கள்?
    1. நீதித்தலைவர்கள் ஒழுங்காக நீதி வழங்கவில்லை.
    2. அயல் நாடுகள் அரசர்களால் ஆளப்பட்டமையால்.
    3. இஸ்ரயேல் கோத்திரங்களை ஒன்று சேர்த்து, வலிமை மிகுந்த இனமாக உருவாக்குவதற்காக.

2. இஸ்ரயேல் மக்களை ஆண்ட அரசர்கள் யார்?
    1. சவுல்
    2. தாவீது
    3. சாலமோன்

3. இஸ்ரயேல் மக்களை ஆண்ட முதல் அரசன் யார்?
சவுல்

4. **சிறுகுறிப்பு**
**1. அரசன் சவுல்**
இவர் பெஞ்சமின் கோத்திரத்தை சேர்ந்தவர். இவரது தந்தை பெயர் கீஸ். இவர் இஸ்ரயேல் மக்களை ஆண்ட முதல் அரசன். இவர் தனது தந்தையின் கழுதையை தேடி போகும் போது, நீதித்தலைவர் சாமுவேலால் அரசனாக அபிஷேகம் செய்யப்பட்டார். அம்மோனிய அரசன் நாகாஸ் யூதா நாட்டு மக்களின் கண்களை எடுத்து உடன்படிக்கை செய்ய போவதை அறிந்த சவுல் அரசன், யூதா நாட்டு மக்களை ஒன்று திரட்டி அம்மோனிய அரசனுக்கு எதிராக போரிட்டு வெற்றி பெற்றார். சவுல் அரசன் தன் வாழ்நாள் முழுவதும் பெலிஸ்தியரோடு யுத்தம் செய்ய நேரிட்டது. இறுதியாக சவுல் அரசன் பெலிஸ்தியரோடு யுத்தம் செய்கையில் கொல்லப்பட்டார்.

5. சவுல் அரசன் எந்த கோத்திரத்தை சேர்ந்தவர்?
பெஞ்சமின் கோத்திரத்தை
6. சவுல் அரசன் யாரால் அபிஷேகம் செய்யப்பட்டார்?
நீதித்தலைவர் சாமுவேலால்
7. சவுல் அரசனின் தந்தை பெயர் யாது?
கீஸ்
8. சவுல் அரசன் எவ்வாறு கொல்லப்பட்டார்.
பெலிஸ்தியரோடு யுத்தம் செய்கையில்

**2. அரசன் தாவீது**

பிற்பட்ட காலத்தில் அரசன் சவுல் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழாதபடியால் இறைவனின் கட்டளைப் படி நீதித்தலைவர் சாமுவேல் தாவீதை அரசராக அபிஷேகம் செய்தார். தாவீது அரசர் யூதா கோத்திரத்தை சேர்ந்தவர். இவரது தந்தை பெயர் ஈசாயி. ஈசாயிக்கு 7 புதல்வர்கள். 7 புதல்வர்களும் நீதித்தலைவர் சாமுவேல் முன் வந்து நின்றனர். அவர்களில் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. இறுதியாக தாவீதை அழைத்து வந்தனர். அப்போது ஆண்டவர் நீதித்தலைவர் சாமுவேலிடம் ''தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனை திருப்பொழிவு செய்'' என்றார். தாவீதை அரசர் சிறுவனாக இருந்த காலத்தில் ஒரு முறை சவுல் அரசனின் படைகள் பெலிஸ்தியரோடு போரிட்டு கொண்டிருக்கும் போது தந்தை ஈசாயி சவுல் அரசனின் படையில் இருந்த தன் மகன்கள் மூன்று போருக்கும் உணவு கொடுத்து விட்டு வரும் படி தாவீதை அனுப்பினார். அங்கு சென்ற தாவீது பெலிஸ்திய படைத்தலைவன் கோலியாத் இஸ்ரயேல் இனத்தவரை போர் புரிய வரும் படி சவால் விட்டான். இதைக் கேட்ட தாவீது போருக்கு சம்மதித்தார். தான் வைத்திருந்த கவணில் கூழாங் கற்களை வைத்து அடித்தார். அக் கல் கோலியாத்தின் நெற்றியில் பட்டது. உடனே கோலியாத் தரையில் வீழ்ந்தான். உடனே தாவீது ஓடிச் சென்று அவரது வாளை எடுத்து கோலியாத்தின் தலையை வெட்டினார். இதனால் பெலிஸ்திய படை தோல்வியடைந்தது. பிற்பட்ட காலத்தில் தாவீது அரசன் உரியா மனைவியுடன் தவறான உறவு கொண்டு இறைவனுக்கு எதிராக பாவம் செய்தார். இறைவாக்கினர் நாத்தான் வழியாக மனமாற்றமடைந்தார்.

9. தாவீது அரசன் எந்த கோத்திரத்தை சேர்ந்தவர்?
யூதா கோத்திரத்தை

10. தாவீது அரசன் யாரால் அபிஷேகம் செய்யப்பட்டார்?
நீதித்தலைவர் சாமுவேலால்

11. தாவீது அரசன் தந்தை பெயர் யாது?
ஈசாயி

12. தாவீது அரசன் இறைவனுக்கு எதிராக செய்த பாவம் யாது?
உரியாவின் மனைவியுடன் தவறான உறவு கொண்டது

13. தாவீது அரசனின் ஆட்சிக் கால சிறப்புக்கள் யாது?
    1. எருசலேமை இஸ்ரயேலின் தலைநகரமாக்கியது.
    2. திரு இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தது.
    3. உடன்படிக்கை போழையை எருசலேமுக்கு கொண்டு வந்து மரியாதை செலுத்தியது.

14. தாவீது அரசனுக்கு இறைவாக்கினர் நாத்தான் கூறிய உவமையை எழுதுக?
செல்வன் ஒருவனிடம் பல ஆடு, மாடுகள் இருந்தன. ஆனால் ஏழை ஒருவன் ஓர் ஆட்டுக் குட்டி ஒன்றை வளர்த்தான். ஒரு நாள் ஒருவர் செல்வனிடம் வந்தார். அவருக்கு விருந்து வைக்க செல்வன் அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியை கொன்று கறி சமைத்து கொடுத்தான்.

15. தாவீது அரசன் தன் தவறை உணர்ந்து மனம் வருந்தி இயற்றிய சங்கீதம் எது?
திருப்பாடல் - 51

16. தாவீது அரசனை மனம் திருப்பிய இறைவாக்கினர் யார்?
இறைவாக்கினர் நாத்தான்

17. தாவீது அரசனின் நண்பன் யார்?
அரசன் யோனர்தான்

**3. அரசன் சாலமோன்**

இவர் இஸ்ரயேலை ஆண்ட 3வது அரசன். இவர் இறைவனிடமிருந்து ஞானம் எனும் கொடையைப் பெற்றக் கொண்டார். இவருடைய தந்தை பெயர் அரசன் தாவீது. தாய் பெயர் பத்சேபா. இவரே எருசலேம் ஆலயத்தைக் கட்டினார். இவர் இஸ்ரயேலின் 12 கோத்திரங்களையும் ஒற்றுமையாக வைத்திருந்தார்.

18. சாலமோன் அரசன் எந்த கோத்திரத்தை சேர்ந்தவர்?
யூதா கோத்திரத்தை

19. சாலமோன அரசன் தந்தை பெயர் யாது?
தந்தை அரசன் தாவீது,

20. சாலமோன் அரசன் தாய் பெயர் யாது?
பத்சேபா

21. சாலமோன் அரசனின் ஆட்சிக் கால சிறப்புக்கள் யாது?
    1. இறைவனிடமிருந்து ஞானம் எனும் கொடையைப் பெற்றக் கொண்டார்.
    2. எருசலேம் ஆலயத்தைக் கட்டினார்.
    3. இஸ்ரயேலின் 12 கோத்திரங்களையும் ஒற்றுமையாக வைத்திருந்தார்.
    4. புதிய நகரங்களைக் கட்டினார்.
    5. நாட்டைக் காப்பாற்ற கோட்டைகளையும், அரண்களையும் கட்டினார்.

22. தாவீது அரசனின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொண்ட முன்மாதிரிகைகள் 5 தருக.
    1. தாவீது அரசன் தான் செய்த பாவத்தை உணர்ந்து கொண்டது.
    2. அக் குற்றத்தை நினைந்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்டது.
    3. தாவீது அரசன் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை சரியாக நிறைவேற்றியது.
    4. நல்ல தலைவராக செயற்பட்டது.

**பாடம் - 11**

## நேர்மையான வாழ்வு

1. சென்ம பாவம் என்றால் என்ன?
   ஆதிப் பெற்றோர் செய்த பாவத்தினால் நாமும் பிறக்கும் போது பாவத்தோடு பிறப்பது.

2. சென்ம பாவம் பற்றி கூறும் நூல்?
   பெரிய குறிப்பீடம் 209

3. சென்ம பாவத்தை நீக்கும் அருளடையாளம் எது?
   திருமுழுக்கு

4. கன்ம பாவம் என்றால் என்ன?
   முழு அறிவுடனும், விருப்புடனும் பாரியதொரு விடயத்தில் இறைவனின் கட்டளையை மீறுவது.

5. கன்ம பாவத்தின் வகைகள் எத்தனை?
   **2**
   1. அற்ப பாவம் 2. சாவான பாவம்

6. சாவான பாவத்திற்குரிய காரணங்கள் எவை?
   1. முழுமையான அறிவு
   2. தவறைச் செய்ய முழுமையான விருப்பம்.
   3. கனமான செயல்
   4. இறை கட்டளையை மீறுதல்

.

7. சாவான பாவத்திற்குரிய காரணங்களை விளக்குக.
   1. முழுமையான அறிவு – 7 வயதிற்கு பின் முழுமையான அறிவுடன் பாவத்தை செய்தல்.
   2. தவறைச் செய்ய முழுமையான விருப்பம் - எவருடைய வற்புறுத்தலின்றி விருப்பத்தோடு செய்யும் பாவம்.
   3. கனமான செயல் - நீதி மன்றத்தில் சொல்லும் பொய், கொலை, விபச்சாரம், களவு
   4. இறை கட்டளையை மீறுதல் - ஞாயிறு திருப்பலிக்கு செல்லாமலிருப்பது, பாடசாலை சட்டங்களை மதியாமலிருப்பது, கொடுக்கப்படும் பொறுப்புக்களை செய்யாமலிருப்பது.

8. சாவான பாவத்தினால் ஏற்படும் விளைவுகள் எவை?
   1. இறைவனோடு கொண்டுள்ள உறவு முறிந்து விடும்.
   2. ஆன்மீக வாழ்வு அழிந்து விடும்.
   3. நரகத்திற்கு செல்ல நேரிடும்.

9. அற்ப பாவத்தினால் ஏற்படும் விளைவுகள் எவை?
   1. இறையருள் இல்லாமல் ஆன்மீக வாழ்வு குலைந்து விடும்.
   2. சாவான பாவத்தை வெற்றி கொள்ள உதவும் வல்லமை குலைந்து விடும்.
   3. இந்த உலகத்தில், உத்தரிக்கிற ஸ்தலத்தில் தற்காலிகமான துன்பம் கிடைக்கும்.

10. தலையாய பாவம் எத்தனை வகைப்படும்?
    **7**
    **1.** அகங்காரம் **2.** பேராசை **3.** மோகம்
    **4.** பகை **5.** போசனைப்பிரியம் **6.** பொறாமை **7.** சோம்பல்

11. தலையாய பாவத்தை போக்குவதற்கு வளர்க்க வேண்டிய நற்குணங்கள் எவை?
    1. தாழ்மை 2. தியாகம்
    3. கற்பு 4. அமைதி
    5. மிதமாயிருத்தல் 6. அன்பு 7. சுறுசுறுப்பு

12. விண்ணை நோக்கி கூக்குரலிடும் பாவங்கள் எவை?
    1. கொலை செய்தல்
    2. ஏழைகளை துன்புறுத்தல்
    3. பணியாளர்களின் ஊதியத்தை வஞ்சித்தல்
    4. முறைகேடான பாலுறவு

13. தூய ஆவிக்கு எதிரான பாவங்கள் எத்தனை, அவை எவை?

**6**

1. தனது மீட்பைப் பற்றி நம்பிக்கை இழத்தல்.
2. நற்செயல்கள், பாவமன்னிப்பு, புண்ணியங்கள் செய்யாமல் மீட்பை எதிர்பார்த்தல்.
3. திருமறையின் உண்மையை மறுதலித்தல்.
4. ஏனையோர் பெறும் ஆன்மீக நலன்களையிட்டு பொறாமைப்படல்.
5. பாவத்தில் நிலைத்திருத்தல்.
6. மனந்திரும்பாமல் பாவ வாழ்வில் நிலைத்திருத்தல்.

14. இறையருள் என்பதன் பொருள் யாது?

ஆண்டவர் இயேசுவின் பலாபலன்களால் தூய்மையையும், ஆன்ம மீட்பையும் பெற்றுக் கொள்ள எமக்கு கிடைக்கும் இறைவரமே இறையருள் எனப்படும்.

15. இறையருளை பெற்றுக் கொள்வதால் பலன்கள் எவை?

1. கிறிஸ்தவரின் வாழ்க்கை புதிய பாதையில் செல்கிறது.
2. பரிசுத்த வாழ்க்கையில் இணைக்கப்படுகின்றான்.
3. பாவ வாழ்விலிருந்து மீட்கப்படவும், தன்னடக்கமாக வாழவும் உதவி கிடைக்கிறது.

16. இறையருள் எத்தனை வகைப்படும் அவை எவை?

**2**

1. தூய்மையாக்கும் அருள்
2. மெய் அருள்

17. தூய்மையாக்கும் அருளால் கிடைக்கும் நன்மைகள் எவை?

1. நமது ஆன்மா தூய்மையாக்கப்படுகிறது.
2. இறைவனின் பிள்ளையாக்குகின்றது
3. விண்ணக உரிமையாளர் ஆவதற்கு வரம் அளிக்கிறது.

18. மெய் அருளால் கிடைக்கும் நன்மைகள் எவை?

1. பாவத்தலிருந்து விலகியிருக்க உதவுகின்றது.
2. நற்செயல் புரிவதற்கு உதவுகின்றது.

19. பாவத்தை விலகியிருக்க நாம் செய்ய வேண்டியது யாது?

1. செபம்
2. நற்செயல்
3. அருளடையாளங்களைப் பெறல்

20. ஒப்புரவு அருளடையாளத்தை பெற விருப்பும் ஒருவர் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் எவை?

1. ஆன்ம சோதனையில் ஈடுபடுதல்.
2. செய்த பாவங்களுக்கு மனம் வருந்துதல்.
3. மீண்டும் அந்தப் பாவங்களை செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.
4. குருவானவரிடம் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெறல்.
5. குருவானவர் சொல்லும் பரிகாரத்தை நிறைவேற்றுதல்.

21. ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பெறும் நன்மைகள் எவை?

1. இறைவனுடனும் அயலவருடனும் உறவு கட்டியெழுப்பப்படுகிறது.
2. பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கின்றது.
3. உள்ளார்ந்த அமைதி கிடைக்கின்றது.
4. மீண்டும் பாவம் செய்யாதிருக்க ஆற்றல் கிடைக்கின்றது.

**பாடம் - 12**

## மனந்திரும்பி நான் வரும்வரை

**1.** மனம் திருந்தும் பாவிகள் மன்னிப்பு பெறுவர் என்பதை உறுதிப்படுத்தும் உவமைகள் 3 தருக.
1. காணாமற் போன மகன்
2. காணாமற் போன திராக்மா
3. பாவிப் பெண்

**2. சிறுகுறிப்பு எழுதுக**

**காணாமற் போன மகன்**

ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தந்தையிடம் சொத்தில் தனக்குரிய பங்கை தரும்படி கேட்டார். தந்தையும் எதுவுமே செய்ய முடியாத நிலையில் சொத்தை பிரித்து கொடுத்தார். இளையவன் நெடுந்துர்ரம் சென்று சொத்தை எல்லாம் நண்பர்களோடு சேர்ந்து அழித்து விடுகின்றார். பின்பு உண்ண உணவு இல்லாமல் மிகவும் கஸ்ரப்படுகின்றார். தன் தவறை உணர்ந்து மனந் திருந்தி தந்தையிடம் வருகின்றார். தந்தை தூரத்தில் மகன் வருவதைக் கண்டு ஓடிச் சென்று கட்டியணைத்து முத்தமிட்டார். அப்போது மகன் “ தந்தையே நான் உமக்கு எதிராக பாவம் செய்தேன். நான் உமது மகன் என கூற தகுியற்றவன், என்னை உங்கள் வேலையாட்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளும்” என்றார். தந்தையோ வேலையாட்களை அழைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். எனெனில் காணாமல் போன என் மகன் மீண்டு வந்து விட்டான் என்றார்.

**3.** காணாமற் போன மகன் உவமையில் இருந்து எமக்கு கற்பிக்கும் பாடம் யாது?
1. நாம் எம் பாவங்களுக்கு உண்மையாக மனம் வருந்த வேண்டும். அப்போது தான் மன்னிப்பை பெறலாம்.
2. இறைவன் மனம் வருந்தும் பாவியை மன்னிப்பார்.
3. மனம் வருந்தும் பாவி மட்டில் இறைவன் மகிழ்ச்சி அடைவார்.
4. இறைவன் இரக்கம் உள்ளவர்.

**காணாமல் போன திராக்மா ( காசு )**

பெண் ஒருவரிடம் பத்து திராக்மா இருந்தது. அதில் ஒன்று காணாமல் போனது. உடனே அவர் விளக்கை ஏற்றி, வீட்டை கூட்டி அதைக் கண்டு பிடிக்கும் வரை தேடுவார். அது கிடைத்ததும் அயல் வீட்டுக்காரரை அழைத்து “ என்னோடு மகிழுங்கள் ஏனெனில் காணாமல் போன திராக்மாவை கண்டு பிடித்து விட்டேன்” என்பார். இவ்வாறு தான் மனம் திரும்பும் பாவியைக் குறித்து கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என்றார்.

**4.** காணாமற் போன திராக்மா உவமையில் இருந்து எமக்கு கற்பிக்கும் பாடம் யாது?
1. இறைவன் நீதிமான்களை அல்ல பாவிகளையே விரும்புகின்றார்
2. மனம் வருந்தும் பாவி மட்டில் இறைவன் மகிழ்ச்சி அடைவார்.
3. இறைவன் இரக்கம் உள்ளவர்.
4. மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**பாவிப்பெண்**

பரிசேயர், சதுசேயர் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் அழைத்து வந்து “ போதகரே இப பெண் கையும் மெய்யுமாக படிபட்டாள். இப்படிப்பட்டவர்களை மோயிசனின் சட்டப்படி கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். நீர் என்ன சொல்லுகின்றீர்” என்றனர். இயேசு எதுவும் பேசாது குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் அவரை விடாது கேட்டதால் அவர் நிமிர்ந்து பார்த்து “ உங்களில் பாவமில்லாதவன் முதலில் கல் ஏறியட்டும் என்றார். ஒருவரும் எறிய துணிவில்லாமல் அவ்விடத்தை விட்டு அகன்றனர். இயேசு நிமிர்ந்து பார்த்து “ இனி பாவம் செய்யாதே” என்றார்.

**5.** பாவிப் பெண் உவமையில் இருந்து எமக்கு கற்பிக்கும் பாடம் யாது?

1. நாம் எம் பாவங்களுக்கு உண்மையாக மனம் வருந்த வேண்டும். அப்போது தான் மன்னிப்பை பெறலாம்.
2. மனம் வருந்தும் பாவி மட்டில் இறைவன் மகிழ்ச்சி அடைவார்.
3. இறைவன் இரக்கம் உள்ளவர்.
4. பாவங்களுக்கு மன்னிப்பு பெற ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற வேண்டும்.

**தூய அகுஸ்தினார்**

இவர் கி.பி. 354 .11.13ம் திகதி வட ஆபிரிக்காவிலுள்ள தாகாஸ்தே நகரில் பிறந்தார். இவரின் தந்தை பற்றிசியஸ். தாய் மொனிக்கம்மாள். தாய் கிறிஸ்தவர், தந்தை பிற மதத்தவர். தாய் ஒரு புனிதை. தூய அகுஸ்ரினார் திறமையான பேச்சாளர். தீய வழியில் சென்ற இவர் தூய அம்புறோசியாரின் வழிநடத்தாலாலும், தாயின் உறுதியான நம்பிக்கையால் மனமாற்றம் அடைந்தார். தனது 33 வயதில் பாஸ்கா ஞாயிறன்று திருமுழுக்குப் பெற்றார்.

**6.** தூய அகுஸ்ரினார் பிறந்த ஆண்டு எது?
கி.பி. 354 .11.13

**7.** தூய அகுஸ்ரினார் பிறந்த இடம் எது?
தாகாஸ்தே நகரில்

**8.** தூய அகுஸ்ரினாரின் தந்தை பெயர்?
பற்றிசியஸ்

**9.** தூய அகுஸ்ரினாரின் தாய் பெயர்?
மொனிக்கம்மாள்

**10.** தூய அகுஸ்ரினாரின் மனமாற்றத்திற்கு காரணமாக இருந்தவை?

1. தாயாரின் செபம்
2. தூய அம்புறோசியாரின் வழிகாட்டல்

**11.** தூய அகுஸ்ரினார் எத்தனை வயதில் திருமுழுக்கு பெற்றார்?
33 வயதில்

**பாடம் - 13**

## ஒப்புரவு அருளடையாளம்

**1.** குணமளிக்கும் அருளடையாளங்கள் எத்தனை, எவை?
1. ஒப்புரவு அருளடையாளம்
2. நோயில் பூசுதல் அருளடையாளம்.

**2.** ஒப்புரவு அருளடையாளத்தை பெற விருப்பும் ஒருவர் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் எவை?
1. தனது பாவங்களை நினைத்தல்.
2. செய்த பாவங்களுக்கு மனம் வருந்துதல்.
3. மீண்டும் அந்தப் பாவங்களை செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.
4. குருவானவரிடம் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெறல்.
5. குருவானவர் சொல்லும் பரிகாரத்தை நிறைவேற்றுதல்.

**3.** ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பெறும் நன்மைகள் எவை?
1. இறைவனுடனும் உறவு கட்டியெழுப்பப்படுகிறது.
2. அயலவருடனும் உறவு கட்டியெழுப்பப்படுகிறது
3. பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கின்றது.
4. நித்திய தண்டனையில் இருந்து மீட்பு கிடைக்கின்றது.
5. மீண்டும் பாவம் செய்யாதிருக்க ஆற்றல் கிடைக்கின்றது.

**4.** நாம் செய்யும் பாவங்களுக்கு கிடைக்கும் தண்டணைகள் எவை?
1. நித்திய தண்டணை
2. அநித்திய தண்டணை

**5.** நித்திய தண்டணை என்றால் என்ன?
நாம் செய்த சாவான பாவத்தால் இறைவனிடம் இருந்து பிரிந்து நிலை வாழ்வை இழத்தல் நித்திய தண்டணையாகும்.

**6.** நித்திய தண்டணையில் இருந்து விடுபட செய்ய வேண்டியது யாது?
1. மனம் மாற வேண்டும்
2. ஒப்புரவு அருளடையாளத்தை பெற வேண்டும்

**7.** அநித்திய தண்டணை என்றால் என்ன?
ஒப்புரவு என்னும் அருளடையாளத்தைப் பெற்றக் கொண்டு நித்திய தண்டணையில் இருந்து விடுபட்டு. விண்ணரசை உரிமையாக்கிக் கொண்டாலும் எமது பாவங்களுக்கு தண்டணை அனுபவிக்க வேண்டும். அத்தண்டணை அநித்திய தண்டணை ஆகும்.

**8.** ஒப்புரவு அருளடையாளச் சடங்கு முறையை தருக.
1. சிலுவை அடையாளம் வரைதல்.
2. கடைசியாக ஒப்புரவு அருளடையாளத்தை பெற்ற திகதியை குருவிடம் கூறல்.
3. கடைசியாக ஒப்புரவு அருளடையாளத்தை பெற்ற நாளில் இருந்து செய்த பாவங்களை கூறுதல்.
4. பின் “ தந்தையே ஞாபகத்திலுள்ள பாவங்கள் இவைகளே, இவைகளுக்கும் மறந்து போன பாவங்களுக்கும் மன்னிப்பும் தண்டனையும் தந்தருளும்.
5. குருவானவர் கொடுக்கும் அறிவுரைகளையும், தண்டனைகளையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளவும்.
6. குருவானவர் இறைவனின் பெயரால் கொடுக்கும் மன்னிப்பின் போது பக்தியோடு “உத்தம மனஸ்தாப” செபத்தை சொல்லவும்.
7. இறுதியாக சிலுவையடையாளம் வரைந்து கொள்ளவும்.

**9.** “உத்தம மனஸ்தாப” செபத்தை எழுதவும்.
என் ஆண்டவரே! அளவில்லாத நேசத்திற்குப் பாத்திரராய் இருக்கிற தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்த படியினாலே முழுமனதுடனே துக்கப்படுகிறேன். இனிமேல் சுவாமி தேவரீரடைய உதவியினாலே நான் ஒரு போதும் பாவம் செய்யேன் என்றும், பாவங்களுக்கடுத்த காரணங்களை எல்லாம் விட்டு விடுவேன் என்று கெட்டி மனதுடனே வாக்குப் பண்ணுகிறேன். எங்கள் நாயகன் இயேசுக் கிறிஸ்து பாடுபட்டு அடைந்த மட்டில்லாத பேறு பலன்களைப் பார்த்து என் பாவங்களை எல்லாம் பொறுத்தருளும் சுவாமி ஆமென்.

**10.** உமது நண்பி/நண்பன் ஒப்புரவு அருளடையாளம் பெற நீர் செய்ய கூடிய செயல்கள் 5 தருக.
1. ஒப்புரவு அருளடையாளத்தை பெற ஊக்கிவிக்க வேண்டும்.
2. இறையன்பில் இருந்து விலகினால் ஏற்படக் கூடிய அழிவை எடுத்துரைத்தல்.
3. ஒப்புரவு அருளடையாளத்தை பெறும் முறையை மறந்திருந்தால் சொல்லிக் கொடுத்தல்.
4. ஒப்புரவு அருளடையாளத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பை தேடிச் கொடுத்தல்.
5. நித்திய, அநித்திய தண்டணையில் இருந்து விடுபட்டு அருள் வாழ்வைப்பெற்றக் கொள்ள ஊக்குவித்தல்.

---

**பாடம் - 14**

## நேயிற்பூசுதல் அருளடையாளம்

**1.** நோயிற் பூசுதல் அருளடையாளத்தைப் பெற வேண்டிய சந்தர்ப்பங்கள் 5 தருக.
1. ஒருவர் கடுமையான உடல் நோயில் இருக்கும் போது
2. தீவர அறுவை சிகிச்சைக்கு முன்னர்
3. வயோதிபத்தில் உடல் நலிவடைந்து இருக்கையில்
4. மரணத்தருவாயில் இருக்கையில்
5. கடுமையான விபத்தின் பின்னர்

**2.** நோயிற் பூசுதல் வழியாகக் கிடைக்கும் நன்மைகள்
1. ஆன்மீக சக்தி
2. உள அமைதி
3. உடல் நலமடைதல்
4. பாவ மன்னிப்பு

**3.** நோயிற் பூசுதலின் அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள்கள் எவை?
1. கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைத்தல்.
2. வேதனைகளை தாங்கிக் கொள்ள வலிமை கிடைத்தல்.
3. பாவங்களுக்கு மன்னிப்பைப் கிடைத்தல்.
4. உடல் நலமடைதல்.
5. நித்திய வாழ்வைப் பெற ஆயத்தம் செய்தல்.

**4.** உமது அயலில் வசிக்கும் கத்தோலிக்க நோயாளிக்கான உமது கடமைகள் 3 தருக.
1. பங்கு குருவானவருக்கு தெரியப்படுத்தல்.
2. நோயிற் பூசுதல் அருளடையாளத்தை கொடுக்க ஆயத்தம் செய்தல்.
3. அடிக்கடி தேவநற்கருணை பெற ஒழுங்கு செய்தல்.
4. இயலுமான சந்தர்ப்பங்களில் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறச் செய்தல்.
5. நோயாளிக்காக செபித்தல்.

**5.** உங்களில் யாரேனும் நோய்யுற்றிருந்தால் திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள் என கூறப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் எது?
யாக்கோபு திருமுகம்

**6.** நோயிற்பூசுதல் பற்றி பெரிய குறிப்பிடம் கூறுவது யாது?
1. ஒருவர் பாரிய நோயுற்றிருக்கையில் அவருக்கு ஆன்மீக சக்தியும் உள அமைதியும், உடல் நலமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக வழங்கப்படும் அருளடையாளத்தை நோயிற்பூசுதல் என அழைக்கின்றோம்.
2. இதனை "அவஸ்தைப் பூசுதல்" என ஒரு காலத்தில் அழைத்தோம். இவ்வாறு அழைக்கப்பட்டமைக்கான காரணம், அது ஒருவருடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தில் பெறப்படும். பூசுதல் என்பதாலேயே ஆகும்.
3. எனினும் மரணம் நெருங்கும் வேளையில் தான் இவ்வருட்சாதானம் பெறப்பட வேண்டும் என்பதல்ல, நோயாளர் குணமடைவதற்கும் இவ்வருட்சாதனம் காரணமாயிருக்கிறது.

**7.** ஒருவர் பாரிய நோயுற்றிருக்கையில் அவருக்கு ஆன்மீக சக்தியும் உள அமைதியும், உடல் நலமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக வழங்கப்படும் அருளடையாளம் நோயிற்பூசுதலாகும். எனக் கூறும் நூல் எது?
பெரிய குறிப்பிடம் 261

**8.** “அவஸ்தைப் பூசுதல்” என ஒரு காலத்தில் அழைத்தோம். இவ்வாறு அழைக்கப்பட்ட மைக்கான காரணம், அது ஒருவருடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தில் பெறப்படும். பூசுதல் என்பதாலேயே எனக் கூறும் நூல் எது?
பெரிய குறிப்பிடம் 261

**9.** நோயிற்பூசுதல் மரணம் நெருங்கும் வேளையில் தான் கொடுக்க வேண்டும் என்பதல்ல, நோயாளர் குணமடைவதற்கும் இவ்வருட்சாதனம் காரணமாயிருக்கிறது என கூறும் நூல் எது?
பெரிய குறிப்பிடம் 261

**10.** நோயிற்பூசுதல் அருளடையாளத்தை இறைமக்கள் எவரும் இறக்கும் வேளையில் இருக்கும் போதோ, நோய் அதிகமானாலோ அல்லது கடின நோயால் அல்லற்றாலும் இவ் அருளடையாளத்தை பலமுறை பெறலாம் என கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி 1529

**11.** நோயிற்பூசுதல் அருளடையாளத்தை பெற, இடத்தையும் நோயாளியையும் ஆயத்தம் செய்ய வேண்டிய முறையைத் தருக.

1. மேசை மீது வெள்ளத் துணியை விரித்து, அதன் மேல் சிலுவையையும் விளக்கையும் வைத்தல்.
2. பாத்திரத்தில் தண்ணீரையும், கை துடைக்கும் துணியும் வைத்தல்.
3. நோயாளியையும், இடத்தையும் தூய்மையாக வைத்திருத்தல்.

**12.** நோயாளியை தர்சிக்கும் போது சொல்ல வேண்டிய செபம் ஒன்று எழுதுக.
அன்புத் தந்தையே இறைவா, இந்த நோயாளிக்காக உம்மிடம் மன்றாடுகின்றேன். இவரது நோய் குணமடைய அவரை தொட்டு குணப்படுத்தியருளும். அவரைப் போல் நோயினால் வருந்தும் எல்லா நோயாளிகளையும் கணப்படுத்தியருள வேண்டும் என்று இறவைா உம்மை இரந்து மன்றாடுகின்றேன் ஆமென்.

**13.** ஏன் நோயிற்பூசுதல் “அவஸ்தைப்பூசுதல்” என அழைக்கப்பட்டது?
ஒருவருடைய வாழ்வின் கடைசிக் கட்டத்தில் கொடுக்கப்படுவதால்.

**பாடம் - 15**

## நோயிற்பூசுதல் சடங்கு முறை

**1.** நோயிற்பூசுதல் அருளடையாளத்திற்கு முன் வழங்கப்படும் அருளடையாளம் எது?
ஒப்புரவு

**2.** நோயிற்பூசுதல் அருளடையாளத்தின் சடங்கு முறையை தருக.
1. தொடக்கம் - சமாதானம் கூறல்
2. மன்னிப்பு வழிபாடு
3. இறைவார்தை
4. விசுவாசிகளின் மன்றாட்டு
5. திரு எண்ணெய் மீது நன்றி மன்றாட்டு
6. திரு எண்ணெய் பூசுதல்
7. குருவின் செபம்
8. நற்கருணை வழங்குதல்
9. ஆசீர் வழங்குதல்

**3.** கத்தோலிக்க திருமறை நூலில் நோயிற்பூசுதல் அருளடையாளத்தை வழங்கும் போது நற்கருணை வழங்கப்படுவதன் நோக்கம் யாதென கூறப்படுகிறது?
1. அது பெறுபவருக்கு திருப்பயண உணவாகும்.
2. நிலைவாழ்வின் வித்தாகவும். உயிர்ப்பின் ஆற்றலாகவும் அமைகிறது.

**4.** கத்தோலிக்க திருமறை நூலில் நோயிற்பூசுதல் அருளடையாளத்தை வழங்கும் போது நற்கருணை வழங்கப்படுவதன் நோக்கம் யாதென கூறப்படுகிறது?
1. அது பெறுபவருக்கு திருப்பயண உணவாகும்.
2. நிலைவாழ்வின் வித்தாகவும். உயிர்ப்பின் ஆற்றலாகவும் அமைகிறது.

**5.** கத்தோலிக்க திருமறை நூலில் எத்தனையாம் அதிகாரத்தில் நோயிற்பூசுதல் அருளடையாளத்தை வழங்கும் போது நற்கருணை வழங்கப்படுவதன் நோக்கம் அதை பெறுபவருக்கு அது திருப்பயண உணவாகும அமைகிறது என கூறப்படுகிறது?
1524ல்

**6.** ஒப்புரவு, நோயிற்பூசுதல் மற்றும் நற்கருணை என்பன கிறிஸ்தவ வாழ்வின் இறுதியில் ‘‘ வான் வீடு செல்ல ஆயத்தம் செய்யும் அருளடையாளமாகும் என கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல் 1525

**7.** ஒப்புரவு, நோயிற்பூசுதல் மற்றும் நற்கருணை என்பன திருப்பயணத்தை முழுமையாக்கும் அருளடையாளங்கள் என கூறும் நூல்?
கத்தோலிக்க திருமறை நூல் 1525

**பாடம் - 16**

## தமது வாழ்வை பாதுகாத்தல்

**1.** எமது வாழ்வு இறைவன் எமக்கு தந்த ?
மாபெரும் கொடையாகும்

**2.** மனிதன் யாருடைய சாயலாக படைக்கப்பட்டான்?
இறை சாயலாக

**3.** மனித வாழ்வு எப்படிப்பட்டது?
1. புனிதமானது
2. தூய்மையானது
3. இறைவனுக்கு சொந்தமானது

**4.** ஏன் மனித வாழ்வு புனிதமானது?
இறைவனோடு ஒன்றித்து படைப்பு செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்வதால்.

**5.** மனித வாழ்வு புனிதமானது எனக் கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல் 2258

**6.** எமது வாழ்வு எப்படிப்பட்டது?
அது தூய ஆவியின் ஆலயமாகும்

**7.** மதுபோதை பாவனை பாவத்தோடு நேரடியாக தொடர்புடையவை என கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல் 2291

**8.** மதுபோதைப் பாவனை ஏற்படுத்தும் தீமைகள் எவை?
1. மனித சுகாதாரத்திற்கு கேடு
2. நோயை ஏற்படுத்தும்
3. குடும்ப அமைதியை இழக்க நேரிடும்

**9.** தற்கொலை செய்து கொள்ள எமக்கு உரிமையில்லை எனக் கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல் 2280

**10.** வாழ்வு இறைவன் எமக்கு தந்த கொடை என்பதால் உமது உடல் மட்டில் உமது கடமை யாது?
1. சுகாதாரமாக வைத்திருத்தல்.
2. நோய் வந்தால் மருந்து எடுத்தல்.
3. ஒவ்வாத உணவுகளை உண்ணக் கூடாது.
4. அதிகமாக உப்பு, சீனி போன்ற பொதுவான உணவு வகைகளைத் தவிர்த்தல்.
5. அடிக்கடி எண்ணெய் உணவுகளை உண்ணக் கூடாது.

**பாடம் - 17**

## அடுத்தவரின் உயிரைப் பாதுகாத்தல்

**1.** “ தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்” என்ற வார்த்தையோடு தொடர்புடையவர்?
இறைவாக்கினர் எரேமியா

**2.** “ என் எலும்பு உமக்கு மறைவானதன்று, மறைவான முறையில் நான் உருவானதையும் பூவுலகின் ஆழ்ப்பகுதிகளில் நான் உருப் பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர்” என்ற பகுதி காணப்படும் நூல் எது?
திருப்பாடல் 139

**3.** மனித மாண்புக்கு முரணான செயல் எது?
உயிரை அழிப்பது

**4.** கருக்கலைப்பு சிறுவர் கொலையாகும் என கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல் 2271

**5.** கருக்கலைப்பு எத்தனையாம் கட்டளைக்கு எதிரான பாவம்?
5ம்

**6.** ஐந்தாம் கட்டளை யாது?
கொலை செய்யாதே

**7.** கொலை செய்யாதே எனற கட்டளை தொடர்பாக புதிய ஏற்பாடடில் கூறப்பட்டவை யாது?
1. தம் சகோதரர், சகோதரிகளிடம் சினம் கொள்பவர் தண்டணை தீர்ப்புக்கு ஆளாவார்.
2. தம் சகோதரர், சகோதரியையோ முட்டாள் என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார்.
3. தம் சகோதரர், சகோதரியையோ அறிவலியே என்பவர் எரி நரகத்துக்கு ஆளாவார்.

**8.** சகோதர அன்பிற்கு முரணானவை எவை?
1. கோபம்
2. வைராக்கியம்
3. பழிவாங்குதல்

**9.** அடுத்தவரின் வாழ்வைப் பாதுகாக்கச் செய்யக் கூடிய 3 விடயங்கள் தருக.
1. அன்பு செய்ய வேண்டும்.
2. கோபம் கொள்ளக் கூடாது
3. பழிவாங்கக் கூடாது.

**பாடம் - 18**

## மோகபாவம் செய்யாதிருப்பாயாக

**1.** திருமணம் ஓர் அருளடையாளம் எனக் கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல்

**2.** மோகபாவம் செய்யாதிருப்பாயாக என்பது எத்தனையாம் கட்டளை?
6ம் கட்டளை

**3.** 6ம் கட்டளை தொடர்பாக இயேசு கூறியது யாது?
ஒரு பெண்ணை இச்சையுடன் பாரக்கக் கூடாது

**4.** 6ம் கட்டளை எதிரான பாவங்கள் 4 தருக.
1. சிறுவர் துஷ்பிரயோகம்
2. ஆபாச படங்கள் பார்த்தல்
3. ஆபாச நூல்கள் வாசித்தல்
4. பலதாரப் பழக்கம்

**5.** தூய வாழ்வு வாழ நீர் செய்ய வேண்டியது?
1. செபித்தல்
2. கட்டுப்பாட்டுடன் வாழ்தல்
3. உடலுக்கு மதிப்பளித்தல்
4. நட்பை தூய்மையாக பேணுதல்
5. அருளடையாளங்கள் வழியாக கிடைக்கும் வரங்களில் நிலைத்திருத்தல்.

**6.** “ உடல் பரத்தமைக்கல்ல ஆண்டவருக்கே உரியது. என கூறும் யாது?
1 கொரிந்தியர்

---

**பாடம் - 19**

## பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக

1. பாவத்திலிருந்து விடுபட எமக்கு உதவுபவர் யார்?
தூய ஆவயானவர்

2. தூய ஒழுக்கம் பற்றி கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருமறை நூல் 2521

3. பிறர் தாரத்தையும் பிறர் பொருளையும் விரும்புவது பாவம் எனக் கூறும் நூல் எது?
விடுதலைப்பயணம்

4. பிறர்தாரத்தை விரும்பாதிருப்பாயாக என்பது எத்தனையாம் கட்டளை?
9ம் கட்டளை

5. பழைய ஏற்பாட்டில் 9ம் கட்டளைக்கு எதிராக செயற்பட்டவர் யார்?
தாவீது அரசன்

6. புதிய ஏற்பாட்டில் 9ம் கட்டளைக்கு எதிராக செயற்பட்டவர் யார்?
ஏரோது அந்திப்பஸ்

7. 9ம் கட்டளைப்படி தூய்மையாக வாழ்வதற்கு நீர் செய்ய வேண்டியது எவை?
   1. அடுத்தவரை மதித்து வாழவோன்.
   2. அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல்.
   3. நேர்மையான சிந்தனையோடு பிறருக்கு உதவுவோன்.
   4. இறைவனுக்கு ஏற்ப வாழ்வோம்.
   5. எனது உடலைத் தூய ஆவியின் ஆலயமாக்குவேன்.

8. கற்பு நெறி தவறுபவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக் கொள்கின்றான் எனக் கூறும் நூல் யாது?
நீதிமொழி

**பாடம் - 20**

## தூய வாழ்வுக்கு முன்மாதிரிகை தூய மரிய கொறற்றி

1. **தூய மரிய கொறற்றி**
இத்தாலியில் கொரினால்டோ கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் லுயிஜி கொரற்றி, தாய் அசுந்தா கர்லினி என்பொருக்கு மகளாக 1890.10.16ல் பிறந்தார. சில காலங்களுக்கு பின் மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு தந்தை இறந்தார். இதனால் மரிய கொறற்றி தனது படிப்பை கைவிட்டு தாய்க்கு உதவினார். வீட்டில் தனியாக இருந்த வேளையில் வீட்டு உரிமையாளரின் மகனான அலெக்சாண்டர் பாவத்திற்கு ஈர்க்க முயற்சி செய்தார். தனது 12 வயதில் நற்கருணை அருட்சாதனத்தைப் பெற்ற இவர் அவனை எதிர்த்தமையினால் கத்திக் குத்துக்கு ஆளானார். 14 கத்திக் குத்துக்களை பெற்ற அவர் பலவீனமான நிலையிலும் "நான் அலெக்சாண்டரை மன்னிக்கிறேன்" என்றார். இறக்குமுன் "அம்மா நான் முதன் முறையாக நற்கருணை பெற்ற போது இறக்க நேர்ந்தாலும் எனது இறைவாழ்வை இழந்து விடமாட்டேன்" என இயேசுவிடம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினேன் என்றார். இறக்கும் போது அவருக்கு நோயிற்பூசுதல், நற்கருணை அருட்சாதனங்களைப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது. புனித மரிய கொறற்றி 1902.07.06ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் அழியாது இருந்தது. அவர் 1950.06.25ம் திகதி புனிதராக உயர்த்தப்பட்டார். மரிய கொறற்றியின் திருநாள் ஆடி மாதம் 6ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

2. தூய மரிய கொறற்றியின் தந்தை பெயர் யாது?
லுயிஜி கொரற்றி, தாய் அசுந்தா கர்லி

3. தூய மரிய கொறற்றியின் தாய் பெயர் யாது?
அசுந்தா கர்லினி
4. தூய மரிய கொறற்றி பிறந்த இடம் எது?
இத்தாலியில் (கொறுனெல்டோ கிராமத்தில் )

5. தூய மரிய கொறற்றி பிறந்த ஆண்டு எது?
கி.பி. 1890.10.16
6. தூய மரிய கொறற்றி எத்தனை வயதில் இறந்தார்?
12 வயதில்
7. தூய மரிய கொறற்றி இறக்கும் தருவாயில் கூறிய வார்த்தைகள் எவை?
1. "நான் அலெக்சாண்டரை மன்னிக்கின்றேன்".
2. "அம்மா நான் முதன்முறையாக நற்கருணை பெற்ற போது இறக்கும் நேரத்திலும் எனது இறைவாழ்வை இழந்து விடமாட்டேன்"
8. 9ம் கட்டளைக்கு எதிரான செயல்கள் (பாவங்கள்) எவை?
   1. சிறுவர் துஷ்பிரயோகம்
   2. ஆபாச படங்கள் பார்த்தல்
   3. ஆபாச நூல்கள் வாசித்தல்
   4. பலதாரப் பழக்கம்

9. நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழ செய்ய வேண்டியவை யாது?
   1. செபிக்க வேண்டும்.
   2. திருவிவிலியத்தை வாசிக்க வேண்டும்.
   3. திருப்பலியில் பங்கு கொள்ளல்.
   4. அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ளல்.

**தூய அக்னெஸ்**
இவர் சிறுவயதிலிருந்தே இறைவனிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இவர் தனது 12வது வயதில் தனது வாழ்வை இயேசுவுக்கு ஒப்புக் கொடுப்பதாக ஆயரிடம் கூறினார். அன்று மாலை உரோமை ஆளுநரின் மகன் இவரை திருமணம் செய்ய விரும்பி பரிசு ஒன்றை அனுப்பினான். அதை அவர் ஏற்றுக் கொள்ளாமல் " விண்ணுலக அரசரின் மகனாகிய இயேசுகிறிஸ்துவை திருமணம் செய்துள்ளேன்". எனக் கூறினார். இதனால் கோபம் கொண்ட அவரை சிறையில் அடைத்தான். சிலைகளுக்கு பூவும் தூபமும் காட்டி வணங்குமாறு கட்டாயப்படுத்தினார். ஆனால் அக்னெஸ் மன உறுதியுடன் செபத்தில் ஈடுபட்டார். ஆளுநரின் மகன் மீண்டும் தன்னை திருமணம் செய்யுமாறு கேட்டான். அதற்கு அக்னெஸ் " எனது மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு மாத்திரமே நான் சொந்தமானவள்" என பதிலளித்தார். இதனால் படைவீரர் அவரை வாளால் வெட்டி கொலை செய்தார். தை மாதம் 21ந் திகதி இப் புனிதையின் திருநாள் கொண்டாடப் படுகின்றது.

10. விண்ணுலக அரசரின் மகனாகிய இயேசுக் கிறிஸ்துவை திருமணம் செய்துள்ளேன். எனக் கூறிய புனிதை?
தூய அக்னெஸ்

11. '' எனது மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு மாத்திரமே நான் சொந்தமானவள்'' எனக் கூறிய புனிதை?
தூய அக்னெஸ்

12. தூய அக்னெஸ்சின் திருநாள் எப்போது கொண்டாடப்படுகின்றது?
தை மாதம் 21ந் திகதி

**தூய டொமினிக் சாவியோ**

இவர் 1842.04.02ம் திகதி இத்தாலியில் பிறந்தார். இவரின் தந்தை பெயர் சாள்ஸ் சாவியோ தாய் பிறிஜட் ஆவார். இவர் ஜோன் பொஸ்கோவின் முதன்மை மாணவருள் ஒருவர். டொமினிக் சாவியோ ஆண்பிள்ளைகளினதும், முதல் நன்மை பெறும் பிள்ளைகளினதும் பாதுகாவலர். சிறுவயதிலிருந்தே நற்கருணையைப் பெற ஆவலாய் இருந்தார். ஒரு நாள் பங்குத்தந்தை '' பாஸ்காவுக்கு உங்களுக்கு அழகான பரிசொன்றை தருவேன். அன்று முதன் முறையாக நற்கருணை மூலம் இயேசுவைத் தருவேன்'' என்றார். அன்றிலிருந்து தினந்தோறும் மிக பக்தியுடன் நற்கருணையைப் பெற்றார். பின் ஜோன் பொஸ்கோ குழுமத்தில் இணைந்து கொண்டார். தனது வார்த்தையாலும் செயலாலும் கிறிஸ்தவ வாழ்வுக்கு சான்று பகர்ந்தார். சில காலத்தின் பின் கடுமையாக நோயுற்றதால் அவர் பெற்றோருடன் அனுப்பப்பட்டார். வீட்டிலும் தூய்மையான செப வாழ்வு வாழ்ந்தார். இவர் இறக்கும் தருணத்தில் காட்சி கண்டார் ''ஆ எவ்வளவு அழகான காட்சி எனக்கு இப்போது தெரிகிறது'' என்றார். 1857 இல் மரித்து இறைவனடி சேர்ந்தார். இவரது திருநாள் பங்குனி 10ம் திகதி கொண்டாடப்படுகிறது. தூய டொமினிக் சாவியோவிடம் செபித்த கற்பிணி அன்னையருக்கு சுகபிரசவத்திற்கு உதவினார்.

13. தூய டொமினிக் சாவியோவின் தந்தை பெயர் யாது?
சாள்ஸ் சாவியோ

14. தூய டொமினிக் சாவியோவின் தாய் பெயர் யாது?
பிறிஜட்

15. தூய டொமினிக் சாவியோ பிறந்த இடம் எது?
இத்தாலியில் (முரிஅல்டோ கிராமத்தில்)

16. தூய டொமினிக் சாவியோ பிறந்த ஆண்டு எது?
கி.பி. 1842.04.02

17. தூய டொமினிக் சாவியோ இறந்தார் ஆண்டு?
கி.பி.1857

18. தூய டொமினிக் சாவியோ யாருடைய பாதுகாவலர்?
ஆண்பிள்ளைகளினதும், முதல் நன்மை பெறும் பிள்ளைகளினதும்

19. ''ஆ எவ்வளவு அழகான காட்சி எனக்கு இப்போது தெரிகிறது'' இக் கூற்றோடு தொடர்புடையவர்?
தூய டொமினிக் சாவியோ

20. தூய வாழ்வின் முன்மாதிரிகையாக வாழ்ந்த மூன்று பேரைக் குறிப்பிடுக.
    1. தூய மரிய கொறற்றி
    2. தூய அக்னெஸ்
    3. தூய டொமினிக் சாவியோ

பாடம் - 21

## கேளுங்கள் கொடுக்கப்படும்

1. எலியா இறைவாக்கினரின் செபம் கேட்கப்பட்ட சந்தர்ப்பம் எது?
   கார்மேல் மலை மீது எலியா இறைவாக்கினரினதும், பாகால் என்ற வேறு தெய்வத்தின் பலிகளும் ஆயத்தம் செய்யப்பட்டது. எலியா இறைவாக்கினர் வைத்த பலிப்பொருள் மீது கடவுள் நெருப்பு மூழச்செய்து எரிபலியை ஏற்றுக் கொண்டார். ஆனால் பாகால் என்ற தெய்வத்திற்கு படைத்த பலிப்பொருள் மீது எதுவும் நடக்கவில்லை. இதனால் எலியா இறைவாக்கினரின் கடவுளே உண்மையான இறைவன் என்பது எண்பிக்கப்பட்டது. எலியா இறைவாக்கினரின் செபம் கேட்கப்பட்டது. உண்மையான இறைவன் யார் என எண்பிக்கப்பட்டது.

2. எலியா இறைவாக்கினரின் செபம் கேட்கப்பட்ட நிகழ்வைக் கூறும் நூல் எது?
   1 அரசர்

3. தூய யோசேப்வாஸ் அடிகளாரின் செபம் கேட்கப்பட்ட சந்தர்ப்பம் எது?
   இரண்டாம் விமலதர்மசூரியன் அரசன் காலத்தில் தூய யோசேப்வாஸ் அடிகளார் கண்டியில் சிறையில் இருந்தார். அக்காலத்தில் மழையின்றி கடும் வறச்சி ஏற்பட்டது. பௌத்தரும் வேறு மதத்தினரும் தங்கள் வழக்கப்படி சமய சடங்குகளை செய்தும் மழை பெய்யவல்லை. இறுதியாக அரசன் தூய யோசேப்வாஸ் அடிகளாரின் உதவியை நாடினான். அடிகளாரும் அரண்மனை முற்றத்திலுள்ள சதுக்கத்தில் பலிப்பீடம் அமைத்து அதன் மீது சிலுவையை வைத்து செபித்தார். சிறிது நேரத்தில் கடும் மழை பெய்யத் தொடங்கியது. ஆனால் தூய யோசேப்வாஸ் அடிகளாரும் பீடமும் நனையவில்லை.

4. தூய யோசேப்வாஸ் அடிகளார் செய்த புதுமைகள்?
   1. மழை பெய்ய செய்தது
   2. மதம் கொண்ட யானையை அடக்கியது

5. புதுமைகள் நடைபெற எது தேவை?
   இறை நம்பிக்கை

6. தூய யோசேப்வாஸ் அடிகளார் மழை பெய்ய செய்த இடம்?
   கண்டி

7. தூய யோசேப்வாஸ் அடிகளார் கண்டியில் சிறையில் இருந்த போது அங்கு அரசனாக இருந்தவர்?
   2ம் விமலதர்மசூரியன்

8. இறைவாக்கினர் எலியா கார்மேல் மலையில் செய்த செபத்தினால் உமது வாழ்க்கைக்குப் பொறக் கூடிய வழிகாட்டல்கள் 2 தருக.
   1. நானும் இறைவனில் நம்பிக்கை வைக்க வேண்டும்.
   2. தினமும் செபத்தில் ஈடுபட வேண்டும்.

9. உமது மன்றாட்டு கேட்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றை தருக.
   நான் இரண்டாம் தவணைப் பரீட்சையில் எல்லாப் பாடத்திற்கும் 50 புள்ளிக்கு மேல் எடுக்க வேண்டும் என்று தினமும் மன்றாடி வந்தேன். நானும் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். அதனால் இறைவனின் அருளால் நான் எல்லாப் பாடத்திலும் 50 புள்ளிக்கு மேல் எடுத்தேன். இறைவனுக்கு நன்றி.

10. நம்பிக்கை இழந்த உமது நண்பனின் விசுவாசத்தை வளர்க்க நீங்கள் கூறும் அறிவுரை யாது?
    இறைவாக்கினர் எலியா, புனித யோசேப்வாஸ் அடிகளார்களின் கதையைக் கூறி, நாம் நம்பிக்கையோடு செபித்தால் இறைவனிடம் இருந்து பல வரங்களைப் பெறலாம் என்று கூறுவேன்

**பாடம் - 22**

## நல்லதையே வேண்டுவோம்

1. திருமுழுக்கினால் கத்தோலிக்கராகிய நாம் அனைவரும் இரண்டு வாழ்வுக்கு உரிமையாகின்றோம் அவை எவை?
   1. உலக வாழ்வு
   2. மறு உலக வாழ்வு

2. மறு உலக வாழ்வு எப்படிப்பட்டது?
   நிரந்தரமானது

3. மறு உலக வாழ்வை (நித்திய வாழ்வை ) உரிமையாக்கிக் கொள்ள நீர் செய்ய வேண்டியது?
   1. நன்மை செய்ய வேண்டும்
   2. செபிக்க வேண்டும்

4. சாலமோன் அரசனுக்கு இறைவன் கனவில் தோன்றிய இடம்?
   கிபயோன்

5. சாலமோன் அரசனுக்கு இறைவனிடம் கேட் வரம் யாது?
   ஞானம்

   **யாரால் - யாருக்கு**

6. "உனக்கு என்ன வரம் வேண்டும்..."
   இறைவனால் - சாலமோன் அரசனுக்கு

7. "உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியோனுக்கத் தந்தருளும்."
   சாலமோன் அரசனால் - இறைவனுக்கு

8. "ஞானமும் பகுத்தறிவும், செல்வமும், புகழும் உனக்குத் தருவேன்."
   இறைவனால் - சாலமோன் அரசனுக்கு

9. சாலமோன் அரசனில் செபம் பற்றிக் கூறும் நூல் எது?
   1 அரசர் 3: 9

10. **இறைவார்த்தையை மனனம் செய்க.**
    "கேளுங்கள் உங்களுக்குத் கொடுக்கப்படும், தேடுங்கள் நீங்கள் கண்டடைவீர், தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்"

11. நமது வாழ்வு எப்போது அர்த்தம் பெறுகின்றது?
    மற்றவர்களுக்காக

12. இறைவனிடம் வேண்டுவோருக்கு நல்லதையே செய்வார் என்பதை உறுதிப்படுத்த இயேசு கூறிய உவமைகள் 2 தருக.
    1. எலியா இறைவாக்கினரின் கதை
    2. சாலமோன் அரசனின் கதை

13. சாலமோன் அரசன் இறைவனிடம் செபித்த செபத்திலிருந்து உமது வாழ்க்கைக்குப் பெறக்கூடிய முன்மாதிரிகைகள் 2 தருக.
    1. அவரைப் போல் இறைவனை நோக்கி செபிக்க வேண்டும்.
    2. எப்போதும் நல்லவற்றையே இறைவனிடம் கேட்க வேண்டும்.

**பாடம் - 23**

## புகழ்பாக்கள்

1. இறைவனிடம் அருள்மிகப் பெற்றவர்கள் மகிழ்ச்சியினால் புகழ்ந்து பாடிய பாடல்கள் எத்தனை?
   3

2. இறைவனிடம் அருள்மிகப் பெற்றவர்கள் மகிழ்ச்சியினால் புகழ்ந்து பாடிய பாடல்களைத் தருக.
   1. மரியாவின் பாடல்
   2. செக்கரியாவின் பாடல்கள்
   3. சிமியோனின் பாடல்

3. அன்னை மரியாள் இறைவனை புகழ்ந்து பாடிய சந்தர்பத்தை தருக.
   அன்னை மரியாள் எலிசபெத்தை வாழ்த்திய போது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது. அப்போது எலிசபெத்து தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அன்னை மரியாவைப் புகழும் போது அன்னை மரியா மகிழ்ச்சியினால் பாடியது.

4. செக்கரியா இறைவனை புகழ்ந்து பாடிய சந்தர்பத்தை தருக.
   பேச முடியாதிருந்த செக்கரியா திருமுழுக்கு யோவானின் பிறப்புடன் பேச்சாற்றலைப் பெற்று இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்.

5. சிமியோன் இறைவனை புகழ்ந்து பாடிய சந்தர்பத்தை தருக.
   இயேசுவின் வருகைக்காக காத்திருந்த போது இயேசுவை காணிக்கை கொடுக்க கொண்டு வந்த போது.

6. மரியாவின் பாடலில் காணப்படும் செய்தி என்ன?
   1. இறைவனை போற்றி புகழ வேண்டும்.
   2. இறைவன் கீழ் நிலையில் உள்ளேரை உயர்த்துவார்.
   3. அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் இரக்கம் காட்டுவார்.
   4. உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடிப்பார்.
   5. வலியோரை அரியணையில் இருந்து தூக்கி எறிவார்.
   6. பசித்தோரை நலன்களால் நிரப்புவ்.ார்.
   7. செல்வரை வெறுங்கையராக அனுப்பவார்.
   8. ஆபிரகாமின் வழிமரபினரை என்னென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்.

7. செக்கரியாவின் பாடலில் காணப்படும் செய்தி என்ன?
   1. இறைவனை போற்றி புகழ வேண்டும்.
   2. இறைவன் மக்களைத் தேடி வந்துள்ளார்.
   3. தாவீதின் குடும்பத்தில் மீட்பர் பிறந்துள்ளார்.
   4. நம் பகைவரிடமிருந்து நம்மை மீட்பார்.

பாடம் - 24

## செபத்தின் வகைகள்

1. செபம் என்பது யாது?
மனிதன் தன் வேண்டுதல்களை இறைவனிடம் சமர்ப்பிக்கவும், நன்றிகூரவும், இறைவனின் விருப்பத்தை மனிதன் புரிந்து கொள்ளவும் இறைவனை நோக்கி நடைபெறும் உரையாடலாகும்.

2. கிறிஸ்தவ செப மரபில் காணப்படும் செபத்தின் வகைகள் எத்தனை?
3

3. கிறிஸ்தவ செப மரபில் காணப்படும் செபத்தின் வகைகள் எவை?
1. வாய்மொழிச் செபம்
2. தியானம்
3. ஆழ்நிலைத் தியானம்

4. வாய்மொழிச் செபம் என்றால் என்ன?
வாய்மொழியாக அல்லது மனதால் சொல்லும் செபம்.

5. வாய்மொழிச் செபம் 2 தருக.
1. தூய பிரான்சிஸ் அசீசியாரின் செபம்.
2. கர்த்தர் கற்பித்த செபம்.

6. இயேசு தம் சீடர்களுக்கு "பரலோக மந்திரம்" என்ற வாய்மொழி இறைவேண்டலைக் கற்பித்தார் எனக் கூறும் நூல்?
கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் - 2700 – 2704

7. தியானம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக?
தியானம் என்பது தேடலாகும்

8. தியானத்தில் வழியாக நடைபெறும் செயல்கள் இரண்டு தருக.
1. கிறிஸ்தவ வாழ்வின் நோக்கம்
2. கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டிய முறை

9. தியானத்தின் மூலம் நமது உள்ளத்தை வருத்தும் நிகழ்வுகளை அறியவும் அவற்றை சரிவர விளங்கிக் கொள்ளவும் முடிகிறது எனக் கூறும் நூல் எது?
கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் - 2705 – 2708

10. ஆழ்நிலைத் தியானம் என்பது இயேசு கிறிஸ்துவை நம்பிக்கையுடன் உற்று நோக்குவதாகும் எனக் கூறும் நூல்?
கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல் - 2709 – 2719

11. ஆழ்நிலைத் தியானம் என்பது நெருங்கிய நண்பரிடையே ஏற்படும் கருத்துப் பகிர்வு போன்றதாகும் எனக் கூறியவர்?
தூய திரேசா

12. தூய பிரான்சிஸ் அசிசியாரின் செபத்தை எழுதுக.
ஆண்டவரே உமது அமைதியின் கருவியாக என்னை ஆக்கியருளும். எங்கு பகையுள்ளதோ அங்கு அன்பையும்? எங்கு மனவருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும், எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும் எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும் எங்கு துன்பம் உள்ளதோ அங்கு இன்பத்தையும் நான் பரப்ப அருள் தாரும். நான் ஆறுதலுக்காக அலைவதை விட்டு ஆறுதலைக் கொடுக்க உழைப்போனாக என்னைப் பிறர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விடுவித்து பிறரைப் புரிந்து கொள்ள உழைப்போனாக என்னை பிறர் அன்பு செய்ய வேண்டும் என்பதை விடுத்து பிறரை அன்பு செய்ய முற்படுவோனாக ஏனெனில் கொடுப்பதன் மூலம் தான் பெற்றுக் கொள்ள முடியும். மன்னிப்பதன் மூலம் தான் மன்னிப்படைய முடியும் இறப்பதன் மூலம் தான் முடிவில்லாத வாழ்வுக்கு பிறக்க முடியும் ஆமென்.

**பாடம் - 25**

## ஆசிப்பா

1. ஆசிப்பா என்பதன் வரைவிலக்கனம் யாது?
ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை
2. ASIPA என்பதன் விரிவாக்கம்
Asian Intergral Pastoral Approach
3. ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை உருவாக்கப்பட்ட ஆண்டு?
கி. பி 1990
4. ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை எந்த நாடடில் உருவாக்கப்பட்டது?
இந்தோனேசியாவில்
5. ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை எத்தனையாவது ஆயர் பேரவையில் உருவாக்கப்பட்டது?
5 வது
6. ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை உருவாக்கத்தில் பங்கு பற்றிய ஆயர்கள்?
400

7. ஆசிய ஒருங்கிணைந்த மேய்ப்புப் பணி அணுகுமுறை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் 3 தருக.
   1. உதாசீன நிலையலிருந்த கிறிஸ்தவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த
   2. பொதுநிலையினரின் தலைமைத்துவத்திற்குரிய இடத்தை வழங்கவும்.
   3. கிறிஸ்தவ குழுமங்களில் இறைவார்த்தையை வாசிக்கவும்

8. ஆசிப்பா குழு கூட்டத்திற்கு இடத்தை ஆயத்தம் செய்யும் போது பின்பற்ற வேண்டியவை?
   1. பொருத்தமான இடம்
   2. மேசை ஒன்றினை வைத்து வெள்ளைத் துணியை விரித்தல்.
   3. மேசையில் திருவிவிலியத்தை வைத்தல்.
   4. திருவிவிலியத்தின் முன்னால் விளக்கை ஏற்றி வைத்தல்.
   5. வட்டமாக அமர்திருத்தல்.

9. ஆசிப்பாவின் 7 படி முறைகளைத் தருக.
   1. நாம் இறைவனை வரவேற்போம்
   2. நாம் இறைவார்த்தையை வாசிப்போம்
   3. உள்ளத்தை தொட்ட வார்தையை தியானிப்போம்.
   4. அமைதியில் இறைவன் எம்மோடு உரையாடுவதற்கு இடமளிப்போம்.
   5. நாம் பெற்றுக் கொண்ட செய்தியை பகிர்ந்து கொள்வோம்.
   6. பணிகளைப் பற்றி கலந்ரையாடுவோம்.
   7. நன்றி கூறிச் செபிப்போம்.

10. ஆசிப்பாவின் 7 படி முறையை விளக்குக.
   1. **நாம் இறைவனை வரவேற்போம்**
   செப மனநிலையில் இறைவார்த்தையை நினைவு கூர்ந்து, கூடியிருக்கும் எம் மத்தியில் கிறிஸ்து பிரசன்னமாக வேண்டும் என அவரை அழைப்பதற்கு செபிக்க சிலரை அழைத்தல்.
   2. **நாம் இறைவார்த்தையை வாசிப்போம்**
   குறிப்பிட்ட இறைவார்த்தையை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்க இருவர் அல்லது மூவருக்கு சர்ந்தர்ப்பம் கொடுத்தல்.
   3. **உள்ளத்தை தொட்ட வார்தையை தியானிப்போம்.**
   உள்ளத்தை தொட்ட வார்தையை உரத்து மூன்ற முறை கூறுவதற்கு சர்ந்தர்ப்பம் கொடுத்தல்.
   4. **அமைதியில் இறைவன் எம்மோடு உரையாடுவதற்கு இடமளிப்போம்.**
   மூன்று நிமிடங்கள் அமைதியாக தியானித்து இயேசு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தல்.
   5. **நாம் பெற்றுக் கொண்ட செய்தியை பகிர்ந்து கொள்வோம்.**
   உள்ளத்தை தொட்ட வார்தையினால் பெற்ற செய்தியை குழுவுடன் பகிர்ந்து கொள்ள விரும்புபவர்களுக்கு இடமளித்தல்.
   6. **பணிகளைப் பற்றி கலந்ரையாடுவோம்.**
   அடுத்த வாரத்தில் ஒருவரின் தேவையை அறிந்து உதவி செய்யக்கூடிய முறையை கலந்தாலோசிக்க சர்ந்தப்பம் கொடுத்தல்.
   7. **நன்றி கூறிச் செபிப்போம்.**
   இயேசுவுக்கு நன்றி கூறி செபிக்க சிலரை அழைத்தல்.